# திராவிடநாடு

16—2—58 | வார வெளியீடு | விலை 10 காசு


## வெகுநாட்களில்லை!

[ கே. சி. முல்லைவழுதி ]

நஞ்சூறும் பல்லுள்ள நாகத் திற்கும்
நலிவின்றி உயிர்வாழப் புற்று உண்டு;
நடுக்காட்டில் உறைகின்ற சிங்கத் திற்கும்
நடுக்கும்புலி சிறுத்தைக்கும் குகைக ளுண்டு.

எஞ்சாது எப்பொழுதும் எவ்வி னைக்கும்
எள்ளளவும் பிறழாமல் மறந்தி டாமல்
பஞ்சாங்கம் பற்றுகின்ற 'புனிதா!' நீயேன்
படுத்திடவும் இடமின்றி உழலு கின்றாய்?

அஞ்சாது எண்ணிப்பார்! நினைப்பில் கூட
அடிமைக்குணம் ஏனுனக்கு? உன்றன் முன்னோர்
வெஞ்சமரில் வீரத்தை விளைத்தார்; நீயோ
விழித்திடவும் உயிர்த்திடவும் அஞ்சு கின்றாய்!

பஞ்சாகிப் போனதுவோ உன்றன் வீரம்?
புகையாகிப் போனதுவோ உன்றன் வாழ்வு?
பண்பாடு தமிழருக்கென் றென்று உண்டு;
பண்பட்ட சிலமொழியுள் தமிழ்தான் முன்னே!
இனியேனும் விழித்தெழுந்து வீரம் காட்டு!
இளிக்கும்மொழி இந்தியைநீ விரைந்து ஓட்டு!
கனியமுதாம் கற்கண்டாம் தமிழின் முன்னே
கரட்டுக்காய் இந்திமொழி காண்பதா? சீ!
காகிதப்பூ மணத்ததில்லை; எட்டிக் காய்கள்
கடுகளவும் இனித்ததில்லை; அலறும் ஆந்தை
கோகிலமாய் இசைந்ததில்லை; இந்திப் பாடை
கவின்தமிழ்முன் காணிடினும் பிணத்தின் வாடை!

தமிழ்மொழியை நம்பினவர் தாழ்ந்த தில்லை;
தரங்கெட்டு இகழ்ந்துரைத்தோர் வாழ்ந்த தில்லை;
இமிழ்செய்து எக்காளிக்கும் இந்திப் 'பூதம்'
இடுப்பொடிந்து ஓடவெகு நாட்க ளில்லை!

## கேட்டீரா சேதி!

வெள்ளையன் போன பிறகு இந்திய உபகண்ட மக்களுக்கு சுதந்திரம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, இரயில்களுக்கு அபரிமிதமான சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை. அப்பப்ப! எத்தனை இரயில் விபத்துக்கள்—எவ்வளவு ஆபத்துகள்!! இது போன்ற விபத்துக்களை முன் கூட்டியே எச்சரிக்க, ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக, டில்லியிலுள்ள இரயில்வே ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கிறது. அதன் பெயர் "டெலிசினடிகேடராம" இதைப் பொருத்திவிட்டால், அபாயம் வருகிறதென எச்சரிக்க, இரயில் என்சினில் ஒரு மணி ஓயாது அடித்துத் தெரிவிக்குமாம்.

*

[illegible] வண்டிகள், கார்கள் மு[illegible] மனிதனுக்கு உதவி செய்யும் சாதனங்கள். ஆனால், அவைகளைப் பலர் அப்படிக் கருதாமல், தைரியத்தைச் சோதிக்கும் கருவிகளாகப் பயன்படுத்துகிறார்களல்லவா? [illegible] விபத்து [illegible] நிற்தல்லவா? [illegible] சென்னை அரசு ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது இந்த வாரம். அரசாங்கத்தின் எல்லா இலாகாக்களை யும் சேர்ந்த 'கெஜட்' பதிவு பெற்ற அதிகாரிகள், மிதமீறிய வேகத்தில் செல்லும் பஸ்-கார்-லாரி முதலியவைகளின் நம்பரைக் குறித்து ஆங்காங்கே உள்ள போக்குவரத்து அதிகாரிகளுக்குப் புகார் செய்ய வேண்டும் என்றும், அந்த அதிகாரி இந்தப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த உத்தரவைச் சர்க்கார் அதிகாரிகள் ஒழுங்காக நிறைவேற்றத் தொடங்கினால், சென்னையில் ஓடும் சர்க்கார் பஸ்களில்தான், ஏராளமான வழக்குகள் கிடைக்கும்!!

*

எகிப்து நாடும், சிரியா நாடும் ஒன்றாக இணைந்து வாழுவது என்கிற முடிவுக்கு வந்திருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும், இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள நாடுகள். மத ஒற்றுமையின் காரணமாக, மத்திய கிழக்கில் இந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இது, எந்த அளவுக்கு வெற்றியளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

*

பத்மவிபூஷண், பாரதரத்னம் போன்ற பட்டங்களை ஒவ்வோராண்டும் இந்தியக் குடியரசுத் தலைவர் அளிக்கிறாரல்லவா? இந்த ஆண்டு பத்மவிபூஷண் என்கிற பட்டம் காங்கிரஸ் சேவாதளத்தைச் சேர்ந்த சர்தீகர் என்பவருக்கு வழங்கப்பட்டது! அவர், அப்பட்டத்தை, "இந்தக் கௌரவத்துக்குப் பாத்திரமாகும்படி நான் செய்யவில்லை என்று என மனச்சாட்சி கூறுகிறது. ஆகவே, இந்தாருங்கள்" என்று திருப்பி அனுப்பியிருக்கிறார்.

*

தோழர் சி. பா. ஆதித்தன் எம். எல். ஏ. இன்னும் சிலரும் சேர்ந்து "தமிழர் கட்சி" என்று ஒரு புதிய கட்சியை அமைத்துள்ளனர். பட்டர் ஆதித்தன் [illegible]லிருந்து, தமிழ்நாடு பிரியவேண்டும் என்பது இக்கட்சியின் கொள்கையென்று தெரிய வருகிறது. பிரிவினை கீதம் இக்கட்சியின் முக்கிய நோக்கம் என்பது கேட்டு, அனைவருக்கும் மகிழ்ச்சியே பிறக்கும். சட்டசபையிலும் இக்கட்சி, தனித்து இயங்குமென்றும், மொத்தம் 4 எம். எல். ஏ.-க்கள் உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

# சம்பத் - தாராசிங் சந்திப்பு

பார்லிமெண்டு உறுப்பினரான நமது ஈ. வெ. கி. சம்பத், பிப்ரவரி 3-ந் தேதி, டில்லியில் சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங்கைச் சந்தித்திருக்கிறார். இந்து மத வெறியையும், வடநாட்டு இந்தி வெறியையும் எதிர்த்துப் போராடிவரும் முதுபெருங் கிழவரான தாராசிங், நமது சம்பத்தோடு உரையாடுவதற்குப் பெரிதும் மகிழ்ந்தாராம். நமது கழக வளர்ச்சிகளைப் பற்றியும் நோக்கங்களையும் எடுத்துச் சொன்னபோது, ஆர்வத்தோடு, கேட்டாராம் தாராசிங். "உங்கள் கழக நடவடிக்கைகளைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் எனக்கு, ஏடுகளில் கிடைப்பதுண்டு" என்று கூறிய தாராசிங், உங்கள் தலைவர்கள் பஞ்சாபுக்கு வர வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டாராம். பார்லிமெண்டு கூடியிருக்கும் சமயத்தில், இதுபோன்ற பல தலைவர்களையும் சந்தித்தும், பிறருடன் உரையாடியும், நாம் யார் - நமது இலட்சியம் என்ன என்பதை விளக்கி வருகிறாராம் சம்பத். வெளிமாகாணங்களிலுள்ள எம். பி.-க்கள், சம்பத் மூலம் நம்மைப்பற்றி அறியப் பெருத்த ஆவல் காட்டுகிறார்களாம். அதன் காரணமாக டில்லியில் நமது ஆங்கில ஏடான "ஹோம் லண்டு"க்கு நல்ல கிராக்கியும், பார்க்கவேண்டுமெனும் ஆசையும் அதிகரித்து வருகிறதாம்.

# "கவர்னர்"

[6] ஆண்டு சந்தா ரூ. 8 [16 2—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 31

ஆண்டு ஒன்றுக்குப் பத்து இலட்சம் செலவழிக்கப்பட்டு 'கவர்னர்' ஒருவர் அமர்த்தப்படுகிறார்! அவருக்கென, ஏதாவது முக்கிய வேலைகள் உள்ளனவா, என்றால் கிடையாது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்ளுகின்றனர்!!

"இதென்ன வேலை, டீ பார்ட்டிக்குப் போவதும், விழாக்களுக்குச் செய்தி அனுப்புவதும் தவிர, என்ன இருக்கிறது இவ்வேலையில்" என்று முன்னாள் சென்னைக் கவர்னரான பிரகாசாவே, கூறியிருக்கிறார். கவர்னர் நிர்வாகத் தலைவர் என்று குறிப்பிடப்படுகிறார், அந்தத் தலைவர் செய்கிற பணியினையோ, வேலைகளையோ யாரையாவது கேட்டால், தக்க பதில் தர இயலாது.

"மாகாண மந்திரி சபை, மத்யசர்க்காருக்கு எதிராகப் போனால், அப்போது கவர்னர் குறுக்கிட்டு, நிர்வாக ஆட்சியை ஏற்பார்" என்று கூறப்படுகிறது. இந்தக் காட்சியினை கேரளத்தில் கண்டோம். எப்படி, வெள்ளையன் காலத்தில் தன்னுடைய பிரதிநிதிகளாக 'கவர்னர்'களை அனுப்பினரோ, அதுபோலவே, இப்போதும் டில்லிசர்க்கார் தனது 'தூதர்களாக' இந்தக் கவர்னர்களை நியமிக்கிறது.

ஆரம்ப முதலே இக்கொள்கையினைக் கண்டித்து வருகிறோம், நாம். வேண்டுமென்றே தனது பிடியினை, மாநிலங்களில் செலுத்த டில்லி செய்துகொண்ட ஏற்பாடு என்றும் எடுத்துரைத்து வருவது அனைவருக்கும் தெரியும். அதனை ஒட்டியே, சட்டசபைக் கூட்டத் தொடரின் முதல் நாள் நிகழ்ச்சியன்று, தி. மு. க. சட்ட சபையினர், சபைக்குப் போகாமல் தங்களது எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

பணமில்லை, பணமில்லை என்று சதா பாடிக்கொண்டிருக்கும் ஒரு அரசு, பத்து இலட்சம் ரூபாயை ஒரு பதவிக்காகக் கொட்டி அழிக்கிறதென்றால், அது கொடுமையினும் கொடுமையாகும். அதிலும், அப்பதவி உப்புச்சப்பற்றது, உருவான காரியங்களுக்காக இருப்பதல்ல என்று கூறிக்கொண்டே, இவ்வளவு ரூபாயையும் வீணடிப்பதென்றால், பெரிய வெட்கக்கேடன்றோ அது!!

கவர்னர், சட்டசபையைத் துவக்கிவைத்து நிர்வாகத் தலைவர் என்கிற முறையில் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சைப் படிப்போருக்கு "இதற்கு ஏன் ஒரு கவர்னர்?" என்று நிச்சயம் கேட்கவே செய்வர். யாரோ அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்ததை, அப்படியே அவர் படித்திருக்கிறார். ஆகவே, மேதி அவர்கள்மீது குறை சொல்லவில்லை, நாம்! ஆயினும், அப்பேச்சு, எப்படியிருக்கிறது — என்ன புதுமையைச் சொல்லியிருக்கிறார் — என்று எண்ணிப் பார்த்திடின், விந்தையும் வேதனையும் எழும்.

மக்களாட்சி—குடியரசு—மக்களின் தீர்ப்பே நாட்டின் சட்டம், என்றெல்லாம் பேசிக்கொண்டு, அதே சமயம் இதுபோன்ற கவர்னர்களையும் நியமிப்பது என்பது ஜனநாயகத்தின் அம்சங்களைக் கேலி செய்வதாகும். இந்தக் கருத்தினை நாம் மட்டுமல்ல பலதரப்பட்டவர்களும் எடுத்துச் சொல்லியே வருகிறார்கள். எனினும், விடாப்பிடியாக, டில்லி இப்பதவிகளை வைத்திருக்கிறது. டில்லிக்குத் தாளம் போடும், மாநில ஆட்சியும், தனது வரிப் பணத்தில் பல இலட்ச ரூபாய்களைக் கொட்டி அழுது, இப்பதவியைக் காப்பாற்றி வருகிறது.

ஏனோ, இது!—என்று, மக்கள் சிந்திக்காமலில்லை. அதனால்தான், மக்களின் தூதர்களான நமது உறுப்பினர்கள், தங்கள் எதிர்ப்புணர்ச்சியை, சட்டசபைக்குப் போகாததன் மூலம் காட்டிக்கொண்டுள்ளனர். ★

# தறி வளர!

நாடெங்கும் கைத்தறி வார விழா நடைபெறுகிறது.

கூட்டுறவு சங்கங்கள், தத்தமது வாய்ப்பு வசதிக்கேற்ற வகையில், இதனைக் கொண்டாடுகிறார்கள்.

அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும், இவ்விழாக்களில் கலந்துகொண்டு உருக்கமாகப் பேசுகிறார்கள்.

டில்லி அமைச்சர்களும், அன்பும் ஆதரவும் கனிய, செய்திகள் விடுத்துள்ளார்கள் மக்களுக்கு.

இது மட்டும் போதாது என்று நாம் பல கால மாக வலியுறுத்தி வருவது, அனைவருக்கும் தெரியும். வேட்டி - சேலை - போன்ற சில ரகங்கள், தறித் தொழிலுக்கென ஒதுக்கிட வேண்டும் என்றும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந் நிலையில், வழங்கப்பட்டு வரும், "ரிபேட்டை"க் குறைக்கவும், டில்லி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது கூடாதெனச் சொல்லப் போவதாக, சென்னை அரசும் சொல்லி வருகிறது.

ஆதரவு, உதட்டு அளவோடா! செயலாகுமா!! —என்பதைப் பொறுத்தே, தறி வளர்வதும் சாவதும் இருக்கிறது.

ஆண்டுக்கொரு முறை கைத்தறி வாரம் என்று கொண்டாடுவதும், அதில் அதிகாரிகளும் அமைச்சர்களும் கலந்துகொண்டு கைத்தறியின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசுவதும் கைத்தறி வளர்ச்சிக்கும் அதில் ஈடுபடும் நெசவாளர்களுக்கும் வழி வகுத்ததாகி விடாது.

காலம் முழுவதும் கைத்தறியே கதி என்று வாழும் நெசவாளி 'கட்டக் கந்தைக்கே வழியின்றி வாடுகிறான் — குடிக்க அரை வயிறு கஞ்சிகூடக் கிடைக்கவில்லையே என்று கலங்குகிறான். ஒண்டக் குடிசை இல்லையே என்று ஓலமிடுகிறான். கைத்தறி நெசவாளியின் இந்த அவலநிலைகள் மாறக் கைத்தறி வார விழா நிகழ்ச்சிகள் பயன்பட வேண்டும்—வழி காண வேண்டும். வறிதே வார விழாக் கொண்டாடி வாழ வகையுள்ளோர் வரவேற்பும் வாழ்த்தும் பெற்றுவிடுவதால் நெசவாளியின் குறை குறைந்து விடாது—தீர்ந்துவிடாது. இதனை ஏழைபங்காளர் நாங்கள்தான் என்று கூறிக்கொள்ளும் ஆள்வோர் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். ★

---

உருவகம்

# 'சிலையும் சிற்பியும்'

**கல்:-** ஐயா! ஐயா!

**சிற்பி:-** யாரது......கல்லா.....ஏன் சிரிக்கிறாய்?

**கல்:-** சிரிக்காமல் என் செய்வது ...உம்மைப் பார்த்தால்......

**சிற்பி:-** பரிதாபமாயிருக்கிறதா...? ஏன் மீண்டும் சிரிக்கிறாய்?

**கல்:-** ஆமாம், உலகத்திலுள்ளோர் அனைவரும் 'கல்' என்றாலே இரக்கமற்ற, பண்பற்ற, பொருள் என்று இயற்கையாகவே எண்ணிக்கொண்டிருக்கும் என்னை, உயிர் கொடுத்து —உயர்ந்த பொருளாக்கி, காவியமே பாட வைப்பது யார்? அழகாடும் வண்ணச் சிலை, செந்தமிழ்ச் சிந்து பாடும் பொற்பாவை, வில்லெழுதி — கயல் எழுதி— நுதல் எழுதி--எள்ளுப் பூ எழுதி — வள்ளைத் தண்டு எழுதி — கொ[illegible] எழுதி — வாழைத் தண்டெழுதி கழுகெழுதி... அப்பப்பா!......

**சிற்பி:-** ஏன் மேல் மூச்சு...சொல்; ...பேசு...பேசு......

**கல்:-** சிற்பியே! உமது திறமையால் நாவலரும், பாவலரும், அறிஞரும், கலைஞரும் போற்றும் என்னைப் பாமரரும் மயங்கும் படி செதுக்குகிறீர்......; ஆனால்......புகழ்? ஏன் புருவத்தை நெரிக்கிறீர்?

**சிற்பி:-** கல்லாயிருந்த உன்னைப் பேசும் சிலையாக்கி உயிர் கொடுத்தவன் நான். எனக்கில்லாத புகழ் உனக்கு என்கிறாயே ...அதைக் கேட்டுத்தான் புருவத்தை நெரித்தேன்! பேதையே! கவியாத்த புலவனுக்கில்லாதபெருமை, அதைக் கேட்டு ரசிக்கிறவனுக்கு உண்டென்கிறாயே? சரியா? பாடுபடும் உழவனுக்கில்லாத உயர்வு நிலச் சொந்தக்காரனுக்கு உண்டென்கிறாயா......?

**கல்:-** அவர்கள் தொழிலும், நிலையும் வேறு! உங்கள் நிலை வேறு! சிற்பியே! வேண்டுமானால் நாளை என்னைப் பிரதிஷ்டை செய்யும் கோயிலுக்கு வாரும், நீங்கள் எழுப்பிய வினாக்களுக்கு விடை கிடைக்கும்.

**சிற்பி:-** சிரிப்பு வேண்டாம்; நாளை சந்திப்போம்...!

**கல்:-** நாளைக்கா......; பரிதாபம்! என் அருகில் நெருங்க முடியாதே உம்மால்...! சரி, சரி வருகிறேன் வணக்கம்!

●

**சிற்பி:-** ஐயா, உம்மைத்தான்...... இதுதானே "குமரிக் கோயில்"

**பக்தன்:-** ஆமாம், நீர் யார்?

**சிற்பி:-** அதோ நீங்கள் தெய்வமாக வழிபடுகிறீர்களே, அந்தப் பத்தினித் தெய்வத்தை வடித்தெடுத்த சிற்பி நான் தான்...!

**பூசாரி:-** யாரது? யாரப்பா...நீ...

**சிற்பி:-** நான்...நான்தான் நீங்கள் வணங்கும் அருள் மங்கையைச் செதுக்கியவன்...பெயர்...

**பூசாரி:-** சரி சரி! வெளியே போய் நில்!

**சிற்பி:-** என்ன அநீதி! கேட்பாரற்றுக் கிடந்த கல்லுக்கு உயிர் கொடுத்து, பேசும் பதுமையாக்கிய எனக்கு அருகில் நெருங்க உரிமையில்லையா? எவ்வளவு கொடுமையான உலகம்! பொருளுக்கு உரிமையாளன் கதற, கன்னக்கோல் கொண்டு பறித்துக் கொண்டவனைப் பார்த்துப் பரிந்து பேசுவது போலல்லவா இருக்கிறது!

[கூட்டம் கலைகிறது. தூணுக்கு அருகில் நின்றிருந்த சிற்பி சிலையருகே செல்கிறான்.]

**சிலை:-** என் தெய்வமே, என் கண்ணீர்?

**சிற்பி:-** சிலையே! நீ செப்பியது முழுதும் உண்மை!

**சிலை:-** உண்மைமட்டுமல்ல, உலக நியதியும் அப்படித்தான் போலும்! முதலில் எல்லாச் சிற்பிகளையும் ஒன்று சேர்த்து "மாநாடு" கூட்டும்!

**சிற்பி:-** எதற்கு மாநாடு? பூசாரிகளை விலக்கவா!

**சிலை:-** இல்லை, இளங்காதா! சிலையைச் செதுக்கின பின்னரும் சிலையருகே நெருங்கலாம் உரிமையாக்கலாம், என்று எண்ணத்தை ஊரறிய, உலகறிய முழக்கம் செய்யுங்கள்! முரசு கொட்டுங்கள்!! உயர்வு உங்களுக்கே! உரிமை உங்களுக்கே! புகழ் உங்களுக்கே! வெற்றி உங்களுக்கே!

**சிற்பி:-** அருமை! அருமையான திட்டம்! நான் படைத்த சிலையே! தான் பெற்ற குழந்தைக்குச்சிறுபருவத்தில் தாயே மரியாதை செய்வதுபோல் உன் யோசனைக்கு நானும் நன்றி கூறுகிறேன்! வருகிறேன்!

—கோபி. கலியபெ[illegible]

# வடிவுக்கு வாய்த்த மணாளன்!

"இரமணி தூங்கிவிட்டாளா?" என்று தன் கடைக்குட்டியைப் பற்றி கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார் சோமசுந்தர முதலியார். வழக்கப்படி கையிலே ஒரு கட்டு 'ஆபீஸ் பைல்' இருந்தது.

"உம்......அவளும் தூங்கிவிட்டாள்; சின்னவளும் தூங்கிவிட்டாள். நீங்க வாங்க, ஊரடங்கிற வேளைக்கு, குழந்தைகள் முழிச்சிகிட்டு இருக்கும்!" என்று கடுகடுத்த மூஞ்சியோடு கூறினாள் அவருக்கு வாய்த்த அருமை மனைவி உருக்குமணி அம்மாள்.

முதலியாருக்கு அவள் கோபத்தின் காரணம் விளங்கவில்லை. காலையில்தான் செலவுக்குப் பத்து ரூபாய் பணம்கூடக் கொடுத்துப் போனார். இருந்தும் உருக்குவுக்கு ஏன் கோபம்?

"ஏன் ஒரு மாதிரியா பேசுறே? பெரியவன் எங்கே?"

"பெரியவனா...அதான் பெரிய விளையாயிற்றே! நீங்க ஒன்பது மணிக்கு வரீங்க. அவன் பத்து மணிக்குத்தான் வருவான். அப்பாவுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கே!"

"என்னடியம்மா அவ்வளவு கோபம்? இப்போ என்ன நடந்திடுத்து?"

"என்னத்தை நடக்கணும்? இனி ஒன்றும் நடக்க வேண்டியதில்லை. நானுந்தான் தினம் கிளிப்பிள்ளைக்குச் சொல்றமாதிரி சொல்லிக்கிட்டு வரேன். காலாகாலத்திலே நடத்த வேண்டியதை நடத்தணும். பையனுக்கு வயசாயிண்டு வருது. அவனோடொத்த பிள்ளைக்கெல்லாம் கால்கட்டு போட்டாச்சு. எதையாவது ஒன்றைப் பார்த்து முடியுங்கோண்ணு; நீங்க நான் சொல்றதை காதாலாவது வாங்கிக்கிறீங்களா? உம்......உங்களைச் சொல்லி என்ன பலன். இருக்கிற வகையோட நான் இருந்திருந்தா என் பிள்ளைக்கு இந்தக் கதி வருமா?"

"ஏய்...இரு...இரு...என்னமோ நீ பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம். இப்போ என்ன சொல்றே? கந்தசாமி கல்யாணத்திற்கு இன்னைக்கு என்ன திடீர் அவசரம் வந்துடுத்து?"

"என்ன அவசரமா? அதோ மேஜை மேலே பத்திரிகை கிடக்கு......" என்று கூறிக்கொண்டே சமயலறைக்குள் போய்விட்டாள் உருக்கு.

**ப. வாணன்**

அவளுடைய திடீர் தாக்குதலிலே வாயடைத்துப் போன சோமசுந்தர முதலியார் மேஜை மேல் கிடந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்ததும்தான், அவளுடைய கோபத்திற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

தஞ்சாவூரிலே இருக்கும் அவருடைய சகலபாடி மகனுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை திருமணமாம். அதற்கு வந்த அழைப்பிதழ் அது. அவருடைய பெரிய பையன் கந்தசாமிக்கு ஒரு வயது இளையவன்தான் இப்போது திருமணமாகப் போகிறவன். உருக்குவிற்கு கோபம் வராமல் என்ன செய்யும்? தன் தங்கச்சி பையனுக்கு முதலில் கல்யாணம். அதுவும் கொஞ்சம் முயன்றிருந்தால் கந்தசாமிக்கேக்கூட அந்தப் பெண்ணை முடித்திருக்கலாம்! ஆகவேதான் ஆத்திரம் பொங்கி வந்தது அவளுக்கு.

"வீட்டிலே இருக்கிறவ ஏதாவது சொன்னால், அதைக் கொஞ்சமாவது மதிக்கிற ஆம்பளையாயிருக்கணும்; பேசலாம். நாம் எதைச் சொன்னாலும் அசைகொடுத்துக் கொண்டே இருந்தால் என்ன செய்வது? நாளைக்கு நாலு பேர் என்ன சொல்வார்கள். தெரிஞ்சவங்க அறிஞ்சவங்க முகத்திலே எப்படி விழிக்கிறது. அப்பா இருக்கிறதுக்கு மேலே பிள்ளை இருக்கு. குடித்தனத்திலே யாராவது நாம் சொல்வதைக் கேட்டால்தானே?

போன வருஷம் மேட்டூர் சாமிநாத முதலியார் வந்தாரே. அவர் ஆவடி காங்கிரஸ் பார்க்கவா வந்தாரு. அப்படின்னு அவர் மாத்திரம் வந்திருப்பாரே! கூட அமிர்தத்தையும் எதுக்கு அழைத்து வரணும்? ஏதோ பிள்ளை பொண்ணை பார்க்கட்டும்; பொண்ணு பிள்ளையைப் பார்க்கட்டும் என்றுதானே அழைத்து வந்தார். பொண்ணோ இலட்சணமாத்தான் இருந்தாள். அப்பவே ஒரு வார்த்தை பேசுங்கள் என்றேன். "பையன் படிக்கிறான், பார்க்கலாம்" என்று தட்டிக்கழித்தீர்கள். இப்படி இருந்தால் குடித்தனம் எப்படி விளங்கும்?" என்று சரமாரியாகப் பேசிக்

கொண்டிருந்தாள், சமையலறையிலிருந்தபடியே.

பத்திரிகையைப் பார்த்தது முதல் முதலியாருக்கும் கொஞ்சம் மன ஆட்டம்தான். உருக்கு கூறுவது முழுவதும் தப்பல்ல. ஊரிலே நாலு வீட்டிலே நடக்கிற மாதிரி காலாகாலத்திலே ஒரு முடிச்சைப் போடவேண்டியதுதான். ஆனால் போன ஆண்டு அதைப் பற்றி நினைக்க அவருடைய நிலைமை இடம் கொடுக்கவில்லை. அதோடு பையன் காலேஜ் படிப்பை முடித்தவுடன்தான் கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணம். அரசாங்க உத்தியோகத்திலே, அதிலும் குமஸ்தாவாகவேலை பார்க்கும் எவன்தான் தன் குழந்தைகளைக் கல்லூரிச் சுவருக்குள் அனுப்ப முடியும்? ஏதோ அதிர்ஷ்டவசமாக நான்காண்டுகளுக்கு முன் அவருக்கு ஹிந்து மத பரிபாலன இலாகாவில் 'ஹெட்கிளார்க்' ப்ரமோஷன் கிடைத்து, சென்னைக்கு மாற்றினார்கள். அந்த நேரத்தில் கந்தசாமியும் எஸ்.எஸ்.எல்.சி., பாஸ் செய்துவிட்டு காலேஜ் படிப்புக்கு ஆவலோடு இருந்தான். தனக்குத்தான் அந்தப்பாக்கியம் கிடைக்காவிட்டாலும் அவனுக்காவது கிடைக்கட்டுமே என்று அவனைக் கல்லூரியில் சேர்த்துவிட்டார், ஹெட்கிளார்க்கானதில் கிடைத்த கொஞ்சம் அதிக வருவாய் இந்த விதத்திலே செலவானது. இருந்தாலும் உருக்கு வருத்தப்படவில்லை. உற்சாகமாகவே குடித்தனத்தை நடத்தி வந்தாள்.

ஆனால் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே அந்த உற்சாகம் குறைந்துவிட்டது. அவளோடொத்த பிள்ளைகளுக்குக் கல்யாணக் கடுதாசி வர ஆரம்பித்ததே அதற்குக் காரணம். கந்தசாமி இண்டர் பாஸ் பண்ணியதுமே, உருக்கு அவன் திருமணப் பேச்சை துவக்கிவிட்டாள். சோமசுந்தரமும் அவளுக்கு ஏதாவது சமாதானம் சொல்லிக்கொண்டே வந்தார். ஆனால் இனிமேல் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே, அன்று அவருக்கும் பட்டது. பையன் இந்த ஆண்டு பி.ஏ., பரிட்சை எழுதப்போகிறான்; மே மாதத்தில் முடிவு வந்துவிடும்; ஜூன் மாதத்தில் திருமணத்தை முடித்துவிடலாமென்றுகணக்குப் போட்டார். ஆகையினாலேதான சாப்பிடும்போது "இப்போதாவது சொல்லுங்கள். தஞ்சாவூருக்குப் போயிட்டு வரும்போது அப்படியே திருவாரூக்கும் போய், பார்வதி வீட்டுக்குப் போய்வரலாம், அவள் பெண் இலட்சுமியை பார்த்துவிட்டுவரலாம்" என்று உருக்கு கூறியதற்கு அவர் சரிஎன்று ஒத்துக் கொண்டார்.

தன் யோசனையை அவர் ஒத்துக் கொண்டதுமே உருக்குவின் பேச்சே மாறிவிட்டது.

"நான் ஏதேதோ உளறினேன்னு நினைச்சுச்சிகாதீங்க, நீங்க ஆபீஸ் வேலையிலே எல்லாத்தையும் மறந்துடுறீங்க" என்று பரிவோடு பேசி, பாலை ஆற்றிக்கொடுத்தாள். சோமசுந்தரத்திற்கு அவள் மாற்றத்திற்குக் காரணம் தெரியும். "உருக்கு! நீ எதுக்குக் கோபப்படுகிறேன்னு எனுக்குத் தெரியாதா? எல்லாம் இந்த ஆனி, ஆவணியிலே முடிச்சிடலாம்! கவலைப் படாதே!" என்று அவள் மனதில் பாலை ஊற்றினார். கணவனும், மனைவியும் அன்பைப் பரிமாறிக் கொண்டிருக்கும் நேரத்திலேதான் கந்தசாமி வந்து சேர்ந்தான்.

"ஏம்பா, நம்ப நாயர் டென்னிஸ் விளையாடிக்கொண்டே 'ஜஸ்டிஸ்' பத்திரிகைக்கு தலையங்கம் சொல்லுவாராமே!" என்று உள்ளே நுழையும்போதே தன் கழக ஆர்வத்தைக் காட்டிக் கொண்டு வந்தான் அவன். அவர் வேலைக்குச் சேர்ந்த நாளிலேயிருந்தே ஜஸ்டிஸ் கட்சியிலே ஆர்வம் கொண்ட சோமசுந்தரம் பையனின் பற்றுதலைக் கண்டு மகிழ்வோடு,

"அது பெரிதில்லை. அப்படி அவர் சொல்லும தலையங்கத்தை படித்துப் பார்க்கணுமே! ஆகா! எவ்வளவு அருமையான கருத்துக்கள்; அழகான நடை! இந்தக் காலத்திலே எழுதுகிறானுங்களே. இது இங்கிலீஷா? சேச்சே..."

"நீங்க நாயர் பேசிக் கேட்டிருக்கிங்களா?"

"ஒரு தடவை கேட்டிருக்கிறேன். அப்பொழுதுதான் நான் வேலைக்கு சேர்ந்த சமயம். எழும்பூரில் இப்போது டி.பி. ஆஸ்பத்திரி இருக்கிறதே, அந்த இடத்தில், என்ன தெளிவாகப் பேசினார் தெரியுமா? அப்பொழுது இருந்த செட்டே வேறே. தியாகராய செட்டி, நாயர், இவர்களைப்போல இந்தத் திராவிட சமுதாயத்திற்கு உழைக்க யாரால் முடியும்? அவுங்கபோட்ட அஸ்திவாரத்தில்தான் இன்று நாமெல்லாம் நிற்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இவர்களெல்லாம் உழைக்காமல் இருந்திருந்தால், நம்மையெல்லாம் இன்றைக்கு உண்மையிலேயே நாட்டை விட்டு துரத்தி இருப்பானுங்க!" அது சரி. ஏனப்பா இவ்வளவு நேரம்?"

"இன்றைக்கு ஒரு புதிய வாக்குவாதம். தாலி கட்டுவது அவசியமா (?) அது தமிழர் பண்பாட்டுக்குகந்ததா (?) என்பதுபற்றி. தாலி அடிமையின் சின்னம். பெண்களின் சுதந்தரத்தைப்பறிக்கிறது என்பது என் வாதம். சில பேர் பழந்தமிழர்கூடத் தாலிகட்டினர்; தாலி இல்லாவிட்டால் மணமானவள் என்பது எப்படி தெரியும் என்று வாதிட்டனர். மணமனால் ஒரு போர்டு கூடக் கட்டி கழுத்தில் தொங்கவிடச் சொல்வார்கள் போலிருக்கிறது!" என்றான் கந்தசாமி.

---

கடன்படுவது வறுமை காரணமாக என்று கூறுவதற்கில்லை. பெரும்பாலான கடன்காரர் செல்வர்களே என்னலாம். அவர்கள் தம்மைச் செல்வர்களாகக் காட்டிக்கொண்டு சமூகத்தின் கண்முன் தம் மதிப்பை காக்க எண்ணியே வருவாய்க்கு மேற்பட்டுச் செலவு செய்து கடன்படுகின்றனர். மக்கள் பண[illegible] இ[illegible]ட்டால் அளக்கப் படுவதால் இப்போலி அளவைப் பெறப் பலரும் பணத்தைக் கடன் வாங்கிச் செயற்கை வாழ்வு வாழ்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் குற்றவாளிக் கூண்டுகளில் நிற்க நேரிடுகிறது.

"சுவாரஸ்யமான வாதம்தான். அதிகம் கூறிஞல் உங்கம்மாவிற்கு கோபம் வரும். போய் படியப்பா!" என்ருர் சோமசுந்தரம். பையன் நல்ல முறையிலே தேர்ச்சி பெற்று வருகிருன் என்று எண்ணிப் பூரிப்பு அடைந்தார். இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்த உருக்கு "சரி சாப்பிட்டுப்பேசலாம் வாடா தம்பி!" என்று எழுந்தாள். பையன் சாப்பிடப் போகு முன், "அடுத்த வாரம் தஞ்சாவூர் போகவேண்டும். பரமுவுக்குக் கல்யாணம்!" என்று தஞ்சைப் பயணத்தை கூறிஞர் தந்தை.

"நான் கூடவாப்பா, வரவேண்டும்?" என்று கேட்டான் கந்தசாமி,

"ஏண்டா, அப்படிக் கேட்கிறே?" என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் அவன் தாயார். "ஏன் அப்படி கேட்கிருய்?" என்ருர் சோமசுந்தரம். எதையோ சொல்ல வாயெடுத்த கந்தசாமி பேசாமல் சாப்பிடப் போய்விட்டான்.

காலேஜில் சேரும்வரை கந்தசாமிக்குக்கழகம் என்ருலே என்னவென்று தெரியாது. சு. ம. க்கள் என்று தமிழ் வாத்தியார் கோபாலகிருஷ்ணய்யர் கிண்டல் செய்வதைத்தான் பள்ளிக்கூடங்களில் அவன கேட்டிருக்கிருன. ஆனல் கல்லூரியில் சேர்ந்த ஆறுமாதங்களில் அவன் தமிழ்ப் பற்றும் நாட்டுப பற்றும் அதிகமாகியது. புதிய புதிய புத்தகங்கள், வரலாறுகள், கழக ஏடுகள் இவைகளைப்படிக்க ஆரம்பித்தான். பையனின் ஆர்வத்தை வரவேற்ருர், அந்தக் 'காலத்திய ஜஸ்டிஸைட் சோமசுந்தரம். ஆகவே வெகு சீக்கிரத்தில் மாணவர் கழக நடவடிக்கைகளில் பெரும்பொறுப்புகளை ஏற்க ஆரம்பித்தான் கந்தசாமி, 'விபூதி அணிவது ஜாதிக் குறி' என்று அவன் மறுத்தபோது உருக்குமணி அம்மாளுக்கு ஆத்திரம் வந்தது. சோமசுந்தரம் மெல்லவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் "ஏதோ, சிறுபயல். அவனிஷ்டப்படி இருந்துபோகிருன், நீ போ!" என்று மனைவியை சமாதானப்படுத்தி வைத்தார். இப்படி முழுக்கழக வீரனுக மாறிவிட்டான் கந்தசாமி. பேச்சோடு மட்டுமல்ல செய்கையாலும் "நான் கழகம்!" என்று பெருமையாகப் பொதுப் பணி செய்து வந்தான். படிப்பது, கழகப்பணி புரிவது இவைகளைத் தவிர உலகத்தில் வேறெதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றியதே இல்லை. ஆகவேதான் அன்று தஞ்சாவூருக்குப் போகவேண்டும் என்றவுடன் "நானுமா......?" என்று கேட்டான்.

சாப்பிட்டு வந்தவுடன் சம்பாஷணை தொடர்ந்தது. "திருமணமென்ருல்...எல்லாம் சடங்கோடுதான் நடக்கும். நிறையச் செலவு செய்வார்கள்!" என்ருன் கந்தசாமி. அவன் பேசி முடிப்பதற்குள், "அவங்களுக்கென்னடா செலவு செய்ய, இரு வீட்டிலும் ஆளுக்கு ஐயாயிரமாவது ஆகும்!" என்றுகூறிஞள் உருக்குமணி அம்மாள். பையன் பேசியதில் இருக்கும் சூட்சமம் சோமசுந்தரத்திற்குத்தானே தெரியும். "ஆமாம்! அவர்கள் 'சீர்திருத்தம்' என்ருல் வீசை என்ன விலை என்று கேட்பார்கள். முழுச் சடங்கோடுதான் நடக்கும்" என்ருர் அவர்.

"எவ்வளவு நஷ்டம்! அர்த்தமற்ற சடங்குகள். அனுவசியச் செலவுகள், அந்தப் பணத்தைப் போட்டு நம்ப பையன் யாராவது ஒருவனைப் படிக்கவைக்கலாம்!" எனறு அலுத்துக்கொண்டான் கந்தசாமி.

அவன் தாய் ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் சோமசுந்தரம் "அதற்கு நாமென்ன செய்வது? என்று அவள் வாயை அடக்கிஞர்.

"நாமென்ன செய்வதா? இப்படிப்பட்ட கல்யாணங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குப்புத்திவரும்" என்று ஆவேசமாகக் கூறிஞன் கந்தசாமி. அவன் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. இந்தக் கழகக் கட்டிடத்திற்குப் போக ஆரம்பித்ததிலே இருந்தே அவன் பேசும் பல விஷயங்கள் அவளுக்குப் புரிவதில்லை. சோமசுந்தரத்திற்கு அதற்குமேல் பேச விருப்பமில்லை.

"அந்த நிலைமை வர இன்னும் சில ஆண்டுகள்போகவேண்டும்!" என்று கூறிக்கொண்டே எழுந்தார். எல்லோரும் படுக்கச் சென்றனர். அன்றிரவெல்லாம் திருமணம் என்ற பெயரால் இந்த நாட்டிலே நடத்தப்படும் அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியே ஆராய்ந்து கொண்டிருந்தான். நினைக்க நினைக்க அவன் மனம் வெதும்பியது. தமிழ் நாட்டின் கதி இப்படியானதே என்று வருத்தப்பட்டுக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தான்.




மனிதனுக்குக் கவலையைக் கொடுத்து அவனை அறியாமையில் வீழத்தும் எதிரிகள் பல. இவற்றை எதிர்த்து போராடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பகைவனை எப்படியாவது தட்டிக் கழிப்பதும், போராட்டத் தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்வதுமே சாமானிய மக்களின் வாழ்க்கை வழி. இந்த முறைகளினுல் பகைவன்ஓடிப்போவதில்லை. அவன் ஒவ்வொரு சமர் தானத்தின்போதும் அதிகச் சலுகைகள் கேட்கிருன். இதற்காகப் பணம் மட்டுமல்ல; உயிரையும் வீரத்தையும் சுதந்திரத்தையும் கூட விலை கூற வேண்டி வருகிறது.

# அவசரப் பிரச்சினைக்கு.....

[M. S. வெங்கடாசலம், M. A.,]

கௌகத்தி திருவிழா, ஏதோ ஒரு விதமாக முடிவுற்றது.

அங்கு பேசப்படாத பிரச்னையில்லை! வராத தலைவர்களில்லை!

நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானங்கள் பற்பல — அவற்றில் ஒன்று நிலச் சீர்திருத்தம் பற்றியது!

**"இந்தியா விவசாய நாடாக இருப்பதாலும்; விவசாய உற்பத்தி போதுமான அளவு பெருகவில்லை என்பதாலும் அத்தகைய பெருக்கம் நாட்டின் மற்றத் தொழில்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதாலும், நிலச் சீர்திருத்தங்கள் மிகமிக அவசியமானவை —தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டியவை"**

இது நிலச் சீர்திருத்தங்கள் பற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதி.

கவலை மறைந்தது இனி, என்று களிப்போடு எழுதின ஏடுகள் பல!

காங்கிரசு ஆட்சியாளர்களின் முதற்பணியே அதுவாகத்தான் இருக்கும் என்று ஆரூடம் கணித்தவர்கள் பற்பலர்!

அவ்வித எண்ணம் தோன்றியதற்கு, தீர்மானத்திலுள்ள வாசகங்கள் மட்டுமல்ல, காரணம்!

எங்கெந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்று கோடிட்டுக் காட்டிட வேண்டிய மாநாட்டுத் தலைவர் தேபரும், எந்தப் பிரச்னையை நழுவவிடாது பேசிப்பேசித் தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொண்ட பண்டிதரும், தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய தலைவர்கள் பலரும், அந்த அளவு வலியுறுத்திப் பேசினர், நிலச் சீர்திருத்தம் பற்றியும், அதன் அவசியம் பற்றியும்.

நிலச் சீர்திருத்தத்தின் மூலம் உணவுப் பொருள் உற்பத்தியை இப்போது இருப்பதைப்போல், மூன்று அல்லது நான்கு மடங்கு பெருக்கிட இயலும் என்ற, வெளிநாட்டு நிபுணர் ஒருவரின் கூற்றை துணைக்கழைத்து வாதாடினர், காங்கிரசுத் தலைவர் தேபர்!

வளர்ந்துள்ள விஞ்ஞான சாதனங்கள், வகையாக, வேண்டிய அளவு நாட்டில் பயன்படுத்தப்படவில்லையே, ஐயகோ! ஏனிந்த நிலை என்று ஏக்கத்தோடு பேசியவர் பற்பலர்!

அத்தகைய இழிநிலைக்குக் காரணம் யாரென்று, அவர்களில் யாரும் திட்டவட்டமாகக் கூறிட முன்வரவில்லை, என்றாலும், அத்தனை பேரும் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியதாக நினைத்துக் கொண்டோ, என்னவோ, அதற்குக் காரணம் அரசாங்கமல்ல— விவசாயிகள்தான்! அவர்களிடத்தில் ஊக்கம் இல்லை என்று குற்றம் சாட்டினார், உணவு அமைச்சர் ஜெயின்!

இவை எல்லாவற்றையும்விட, நாட்டு நிலையை நல்ல முறையில் படம் பிடித்துக் காட்டியது, வங்கத்துக் காங்கிரசுக்காரரின் பேச்சு தான்! அவர் பெயர் டாக்டர் நளினச சயால்......

அவர் சொன்னாராம்; "நம்நாட்டில் நடுத்தர வகுப்பார் வீட்டுப் பெண்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் உணவு இருப்பதில்லை" என்று!

கூறியது மட்டுமல்ல—கதறியழுதிருக்கிறார் அவர்!

வாரத்தில் ஐந்து நாட்கள் பட்டினி!

அந்த நிலையிலுள்ள பெண்கள் தொகை, இந்நாட்டுப் பெண்கள் தொகையில் பாதிக்கு மேலிருக்கும்!

இத்தகைய திடுக்கிட வைத்திடும் உண்மைகளை — மனிதாபிமானம் உள்ள எவரது உள்ளத்திலும் ஆற்றொணாத் துயர் ஏற்படுத்துகின்ற அலங்கோலத்தை- ஆட்சியில் அமர்ந்திருப்போர் வெட்கித் தலைகுனிந்திட வேண்டிய அவலத்தை — அவர் எடுத்துரைத்திருக்கிறார்!

இவ்வளவும் பேசப்பட்ட பிறகுதான், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பற்றிய தீர்மானம், காங்கிரசு மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அறிகிற எவருக்கும், காங்கிரசாரின் முதல் வேலைத் திட்டமே நிலச் சீர்திருத்தமாகத்தான் இருக்கக் கூடும் என்ற எண்ணம் இயற்கையாகவே எழும்!

ஆனால்...? நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடுகிறது! இவ்வளவு நெஞ்சழுத்தக்காரர்களா காங்கிரசார் என்று ஆச்சரியத்தோடு,-ஆனால் ஆத்திரத்தோடு—கேட்கத் தோன்றுகிறது!

முதற்பணி — மிக மிக முக்கியமானதென்று அவர்களாலேயே வேதனையோடு, ஒரு முகமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட பணி—எப்போது நிறைவேற்றப்படும் என்று, காங்கிரசுக் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சத்திய நாராயண ராஜு என்பவர் கூறிடும்போது நாடே திடுக்கிடுகிறது!

**அவர் சொல்லுகிறார், நிலச் சீர்திருத்தம் 1962ல் நிறைவேற்றப்படும் என்று?**

அவசரமான பிரச்சினைக்கு விடிவு காலம் 1962ல்!

நாட்டு மக்களில் 70 சத விதத்திற்கு மேலிருக்கின்ற, உழவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைக்கு விடிவு காலம் 1962ல்!

வாழ்வதா—சாவதா, என்றிருக்கிற வினாவுக்கு விடை, 1962ல்!

நாடு ஏதாவது தவிர்க்க முடியாத ஆபத்தில் சிக்கியிருந்தால் —பகைவர்களால் தாக்கப்பட்டு, உரிமைக்காகப் போராடவேண்டிய சிக்கலான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால்—நான்கு ஆண்டுகளல்ல, நாற்பது ஆண்டுகள் கூடப் பொறுத்திருக்கலாம்!

அப்படிப்பட்ட நிலை இல்லையே இன்று!

சுதந்திர நாளிலும், குடியரசு தினத்திலும், ஜனாதிபதிக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் மரியாதை செலுத்தவேண்டிய சமயங்கள் தவிர, மற்ற எந்தச் சமயத்திலும், நமது படைவீரர்களுக்கோ படைக்கலங்களுக்கோ வேலையில்லாத நிலை!

இருந்தும் நான்கு ஆண்டுகள் பொறுத்திடுங்கள் என்று, பொறுப்பான தலைவர், பொறுப்பற்ற முறையில் பேசிடக் காரணம் என்ன?

அவரது அடுத்த வாசகம், அந்தக் காரணத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிடுகிறது நமக்கு! இதோ, அந்த வாசகம் :-

" 1962-ல் தேர்தல் சமயத்தில் நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்!"

வாழ வகையற்ற வனிதை, ஆற்றிலே இறங்கியாவது உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், ஆற்றில் மெள்ள மெள்ள, தயங்கித் தயங்கி, இனி

யாவது வாழ்ந்திட ஏதேனும் வகையிருக்கிறதா என்று அந்த நேரத்திலும் சிந்தித்துக்கொண்டு, தண்ணீரில் இறங்கிக்கொண்டிருக்கிற சமயத்தில், ஒரு வாலிபன் பார்த்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அவன் மனிதாபிமானம் உள்ளவனாக இருந்தால், உடனே ஓடிப்போய் அவளைத் தடுத்து நிறுத்தி, அவளுக்கு தன்னாலான உதவியைச் செய்வான். மாறாக, அவள் தண்ணீரில் இறங்குகிறவரை, இறங்கட்டும் இறங்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவள் மூச்சுத் திணறி மூழ்குகிற நேரத்தில் ஆற்றிலே குதித்து அவளைக் காப்பாற்றி, அதன் மூலமாகத் தனது வீரத்தை வெளிக்காட்டி, அவள் மயக்கமாக இருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவளை வீட்டிற்குக் கொண்டு செல்ல நினைப்பவனைக் களங்கமற்றவன் என்று சொல்ல இயலும்?

வனிதையைக் காப்பதற்கு உயிரைத் துச்சமென மதித்தான் என்று அவனைப் பாராட்ட இயலும்?

ஆற்றிலே குதித்து, அந்தப் பெண்ணைக் காப்பாற்றியவனது நோக்கம், அவளை உண்மையாகவே காப்பாற்றுவதற்கல்ல!

அதைப்போல், "தேர்தல் காலம் வரை பொறுத்திருங்கள், நன்மை செய்கிறோம்" என்பவரது நோக்கமும் மக்களுக்கு நன்மை செய்வது அல்ல!

"தேர்தல் காலத்தில்" என்று அவர் சொல்லுகிறார்—"தேர்தலுக்காக" என்று நாம், அதனைக் கொள்ளுகின்றோம்!

அவசரப் பிரச்சினைக்கு விடிவு காலம் 1962-ல் அதுவும் தேர்தலுக்காக! மக்களின் முக்கியப் பிரச்சினையாக உள்ள நிலச் சீர்திருத்தம் செய்யுங் காங்கிரசுக்கே நமது வாக்குரிமைகளை வழங்குவோம் என்று நினைத்து மக்கள் காங்கிரசுக்கே 'ஓட்' அளிப்பார்கள் என்பது இவரது நோக்கம் போலும்! பாவம், இனியும் மக்களை ஏமாற்றலாம் என்று நினைக்கும் இவரது போக்கைக் கண்டு நாம் பரிதாபப்படுகிறோம். மக்கள் இத்தகைய சாகசங்களில் மயங்கும் காலம் மலையேறி விட்டதென்பதை எடுத்துக் கூற விரும்புகிறோம்.

★

# மலை வளம்

[அன்பு]

கடற்கடம் பொறிந்து இமயத்தில் தங்கள் இலச்சினையைப் பொறித்த சேரர் குல வழித் தோன்றல்-வாய்வாள் மன்னன்-சேரன் செங்குட்டுவன் தன் துணைவி வேண்மாளுடன் மலைவளங்காணச் செல்லுகிறான். பல் வகைப் படையினரும் ஆய் மகளிரும் அவனைத் தொடருகின்றனர்.

வஞ்சிமா நகரை விட்டு நீங்கி, பெருமலையினின்றிழியும் பேரியாற்றின் கரையில் ஓர் மணற்றிட்டில் தங்குகிறான். கோங்கம், வேங்கை, கொன்றை, சுரபுன்னை, மஞ்சாடி, சந்தனம் போன்ற மரங்களினின்றும் உதிர்ந்த மலர்கள் நிறைக்கப்பட்டு மலையினின்றும் இறங்கியோடுகிறது பேரியாற்று நீர்! மதுரகம், ஞமிறு, வண்டு முதலிய கூட்டங்கள் ஆற்று நீரைச்சுற்றி இசை பாடுகின்றன!

செங்குட்டுவன் தங்கியிருக்கும் மலையின் சுற்றுச் சூழல்களினின்றும் பல் வேறுபட்ட ஒலிகள் கிளம்புகின்றன. குறவைக் கூத்தும், கொடிச்சியர் பாடலும், வெறியாடலும் தினை குற்றுவோரது உலக்கைப்பாட்டின் ஒலியும், புனத்து எழும் விளியும், தேன் கூட்டை உடைத்த குறவர் ஓதையும், அருவி இழியும் பறையொலியும், புலியொடு பொருதும் யானையின் பிளிறலும், பரண் மேல் நின்று பகை விலங்கைக் கடிதலும், குழியில் வீழ்ந்த யானையைப் பிடிக்கும் பாகர் ஒலியும், எங்கும் திரிகின்ற செங்குட்டுவனது சேனையொலியுடன் கூடி மலை பகுதி எங்கணும் அதிர்கிறது!

மலைவளங் காண வந்த மன்னனைக் காண, குன்றக்குறவர், தாங்கள் அன்பின் காணிக்கையாகக் கொண்டு வந்த பல்வேறு வகை மலைபடு பொருள்களைத் தலையில் சுமந்துவந்து நிற்கின்றார்.

யானைத் தந்தங்கள், அகிற் கட்டைகள், மான் மயிர்க் கவரிகள், மதுக் குடங்கள், சந்தனக் கட்டைகள், சிந்துரக் கட்டிகள், நீலக் கற்கள், கத்தூரிகள், ஏலக்கொடிகள், மிளகுக் கொடிகள், கூவைக் கிழங்கின் மா, கவலைக்கொடிகள், முதிர்ந்த தேங்காய்கள், இனிய மாம்பழங்கள், பச்சிலை மாலைகள், பலவின் பழங்கள், வெள்ளுள்ளிகள், கரும்புகள், பூ மலிந்த கொடிகள், கொழுதாள் கமுகின் செழுகுலை தாறு, பெருகுலை வாழையின் இருகனி தாறு, யாளிக் குட்டிகள். அரியின் குருளை, வான் வரி புலிக்குட்டிகள்; யானைக்குட்டிகள், குரங்குக் குட்டிகள், கரடிக் குட்டிகள், மான், மான் குட்டிகள் கத்தூரிக் குட்டிகள், கீரிப்பிள்ளைகள் பீலி மஞ்ஞை, (தோகையுடைய ஆண் மயில்) புனுகுப் பூனைக் குட்டிகள், கானற் கோழிகள்' தேன் மொழிக் கிள்ளைகள் முதலிய பொருள்களை மலை மிசைக் குறவர் தலை மிசைக் கொண்டு வந்து செங்குட்டுவன் முன் நின்றனர்.

யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியரி தாரமும்
ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்
கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமுங் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறும்
ஆளியி னணங்கு மரியின் குருளையும்
வான்வரிப் பறழு மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையு மடமான் மறியும்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியுந் தேமொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டு

(சிலம்பு: வஞ்சிக் காண்டம்,
காட்சிக் காதை.)

'செங்குட்டுவன் மலைவளங் கண்டான்' என்பதைக் கூறவந்த இளங்கோவடிகள் சேரநாட்டின் மலைவளத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்.

செங்குட்டுவன் தங்கியிருந்த மலைப் பகுதியைச் சுற்றிப்பல்வகை ஒலிஎழுவதாக விவரிக்கிறார். அவ்வொலிகள் மலைவாழ் மக்களின் வாழ்க்கையையும், அவர்தம் தொழிலையும் நமக்கு நன்குணர்த்தி நிற்கின்றன.

குன்று வாழ் குறவர்கள் கொண்டு வந்த மலை படுபொருள்கள், சேரன்பால் அம்மக்கள் கொண்டிருந்த அன்பின் திட்பத்தை வெளிப்படுத்துவதோடு சேரநாட்டின் கொழுத்த வளத்தையும் வெளிப்படுத்துகிறது.

★

# உலக சமுதாயம்!

[ நாஞ்சில், செ. அன்பெழில் ]

முதன் முதலில் ஏற்பட்டசமுதாயம்' குடும்பம், உலக வாழ்க்கை என்னும் வண்டியை ஒழுங்காக ஓட்டிச் செல்ல ஆணும் பெண்ணும் மிகமிக இன்றியமையாதவர்கள் என்ற கட்டாயம் ஏற்பட்ட காரணத்தால் குடும்பங்கள் பல உருவாயின, ஆண்மை என்ற மரத்தைப் பெண்மை என்ற கொடி தழுவி வளர்ந்தது. அக்கொடியிலே பூத்த மலர்கள்தான் குழந்தைகள். இவர்களின் சேர்க்கைதான் குடும்பம். குடும்பங்கள் பல சேர்ந்து ஓர் இனமாக மாறியது. பிறகு ஊர்களும் நாடுகளும் உருவாயின. ஒன்றி வாழத் தலைப்பட்ட மக்கள் தங்களை ஒழுங்காக நடத்திச் செல்ல ஒரு தலைவன் தேவை என்று உணர்ந்தனர். 'யாரைத் தலைவனாக எடுப்பது' என்ற கேள்வியைக் கிளப்பிவிட்டுப் பதில் காணச் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் 'நானே தலைவன்' என்ற ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள் மக்கள் உடல் வலிமை மிக்க ஒருவன். தன்னை ஊருக்குத் தலைவன் என்று அறிவித்துக்கொண்டான். 'தலையெடுத்தவன் தண்டல்காரன்' என்ற பழமொருக்கேற்ப உடல் வலிமை உள்ளவன் ஊராள்வோனானான். எதிர்க்கத் திறனற்ற மக்கள் அவனுக்குப் பணிந்து, அவனோடிணைந்து வாழ ஒத்துக்கொண்டார்கள். அவன் ஆள்வோனானான். இவர்கள் அவனுக்கு அடிபணிந்து வாழ்வோரானார்கள். ஊர்கள் பல ஒன்று சேர்ந்து நாடாக, நாடுகள் பல சேர்ந்து கண்டங்களாக, பிறகு உலகமாக உருவெடுத்தது.

இந்த நேரத்தில்தான் 'நான்' என்ற சொல் உருவானது. நான்! இந்த இரண்டு எழுத்துச் சொல் இந்த உலகிலே ஏற்படுத்தியிருக்கும் கொடுமைகள் எண்ணத் தொலையாதன. 'நான்' என்ற ஆணவத்தின் மரண மண்டபத்தில் இன்னொரு சொல் அரும்பியது. அதுதான் 'நாம்! இச் சொல் தேம்பிக்கிடந்தவர்களுக்கு இன்பத் தென்றலாக் இருந்தது. இந்தச் சொல்லை அரியணையில் ஏற்றுவதற்குத் துடித்துக்கொண்டிருந்தவர்களின்முயற்சி சில இடங்களில் வென்றது, ஆனால் பல இடங்களில் தோல்வியைத்தான் முத்தமிட்டது. நான்! இந்தச் சொல்லின் விளைவால்தான் போரும் பூசலும், கொலையும் குழப்பமும், தொல்லைகளும் தொந்தரவுகளும் ஏற்பட்டன. உலகப்போரின்ஆரம்பத்திற்கே இச் சொல்தான் அடிப்படை.

தன் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக் கோட்டை விரிவுபடுத்த முயன்றதன் விளைவுதான் இது.

அந்த உலகப் பெரும் போர்கள் இந்த உலகிற்கு ஒரு எச்சரிக்கைப் பலகை. இன்றும் உலகம் அந்தப் பாதையில்தான் அடியெடுத்து வைக்கப்பாக்கிறது. இது தடுக்கப்பட வேண்டும், தடுக்கப்பட்டே ஆக வேண்டும். அந்தப் பாதை ஆபத்து நிறைந்தது மட்டுமல்ல, அழிவைக் கொடுப்பதும்கூட. அழிவின் ஆரம்ப கீதம் இப்போது ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. துருக்கியில் ஆர்ப்பரிப்பு, காஷ்மீரில் கடும் புயல், பொதுவுடைமைச் சீனாவில் போரின் புகைச்சல், பார்மோசாவின் பதைபதைப்பு நீங்க அமெரிக்காவால் பல மூட்டப்படுகிறது. இரஷ்யா இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு இதழோரத்தில் மென் சிரிப்பை வரவழைக்கிறது. அந்தச் சிரிப்பின் பொருள்............?

இந்த நிலைமை மாறவேண்டுமானால் சமுதாயத்தின் இன்றைய அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைப்பது என்றால் மதிற்சுவர்களின் பூச்சுக்குப் புது வர்ணம் கொடுப்பதல்ல. அதன் அடிப்படையையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும். புதிய முறையில் பொன்னான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் சமுதாயம். மனித உரிமை என்னும் அடித்தளத்தில் அமைக்கப்படவேண்டும் அந்த அழகு மாளிகை. அங்கச் சமுதாய அமைப்பானது இன்றுள்ளது போல ஏற்றங்கொண்டோர்க்கு இன்பச்சோலையாகவும், ஏழைகளுக்கு எரிமலையாகவும் இருக்கக் கூடாது. விண்ணிலே ஓரினம் மண்ணிலே மற்றோரினம் என்ற நிலைமையை ஏற்படுத்தக் கூடாது. அந்த அமைப்பு, அரிஸ்டாட்டல் என்ற கிரேக்க நாட்டு அறிஞன் தனி வாழ்வு சமுகாய வாழ்வு, நல்வாழ்வு என்று வாழ்க்கையை மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொரு அரசாங்கமும் மக்களின் நல்வாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொள்ள வேண்டும்மென்று வலியுறுத்துகிறார்.

இந்த இடத்தில்தான் 'அரசாங்கம் என்றால்என்ன?'என்றகேள்வி நம் சிந்தனையைத் தொடுகிறது. கூட்டுவாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொண்டு ஒன்று சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக்கொள்ள ஏற்படுத்திய அமைப்புத்தான் அரசாங்கம். ஆனால் சூழ்நிலைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப அது பல இடங்களில் பல மாதிரியாக அமைந்துகொண்டது. இதைத்தான் பேராசிரியர் லாஸ்கி, "சமுதாயத்தின் வாழ்க்கையை மேலும் மேலும் வளமுள்ளதாக மாற்றியமைப்பதற்காக மக்கள் ஒன்றாகத் திரளும் அமைப்புத்தான் அரசாங்கம்" என்று குறிப்பிடுகிறார்.

அரசாங்கம் சிங்காதனப் பதுமைகளுக்கு சிங்காரப் பூஞ்சோலையாகவும், அதிகார பிம்பங்களுக்கு அலாவுதீனின் அதிசயவிளக்காகவும், சீமான்களுக்கும் பூமான்களுக்கும் தித்திக்கும் செங்கரும்பாகவும், கடவுளைக் காட்டி காசு பறிக்கும் கயவர்களுக்குக் கதவில்லாக் கருவூலமாகவும், இளைத்துப்போன ஏழைகட்கு எத்தர்களின் குகையாகவும், இறை செலுத்தும் மக்களுக்கு எதிர்த்தடிக்கும் புயலாகவும், புதுமை விரும்பிகளுக்குப் புதை குழியாகவும் இருக்கக்கூடாது. சமுதாய அமைப்பை அடியோடு மாற்றிப் புதுமை நிறைந்ததாக ஏற்படுத்த வேண்டும் அரசாங்கம். கிரேக்க நாட்டறிஞர் அரிஸ்டாட்டல் "சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவதுதான் ஒரு சிறந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்" என்ற சொற்களின் வாயிலாக அரசாங்கத்தின் தலையாய கடமையை அறுதியிட்டுக் கூறுகிறார்.

கி. பி. பத்தாவது நூற்றாண்டின் முன்னைய நாட்களெல்லாம் இருண்ட நாட்கள் என்று அழைக்கப்பட்டன. பத்தாவது நூற்றாண்டில்தான் விஞ்ஞானத்தின் விடிவெள்ளி வேகமாகக் கிளம்பியது பொற்காலம் பேரொளி பரப்பிப் பூரிப்போடு அடியெடுத்து வைக்க ஆரம்பித்தது. சிந்தனைப் புரட்சி உலகைச் சிதற அடித்தது. மன்னர் மகுடத்தைத் தாங்குகின்ற மதத் தலைவர்களின் ஜப மாலைகள் அறுந்து விழுந்தன. அரசாங்க இலகான் தங்கள் கையில் கிடைத்துவிட்டது என்ற அதிகார வெறியால் அத்துமீறி ஆனந்தக் கூத்தாடிய ஆணவக்காரர்கள் அழிவுப் பாதையிலே அடியெடுத்து வைக்கத் துவங்கினார்கள். அரசிருக்கைப் பதுமைகளும் அரண்மனைத் தூண்களும் அலறின. 'ஆண்டவன் பிரதிநிதி நான்' என்று ஆணவத்தோடு கூறிவந்த அரச பரம்பரை மாண்டவர்கள் பட்டியலிலே இடம் பெற்றது. மன்னன் தலையிலே இருந்த மணிமுடி மண்ணை முத்தமிட்டது. ஆதிக்கவெறியர்களுக்கு அபாய அறிவிப்பு முழங்கியது. பொற்காலத்

தின் உதயகீதமே மக்களின் இதய கீதமாக ஒலித்தது.

பதினைந்தாவது நூற்றாண்டிற்குப் பிறகுதான் விஞ்ஞானம் ஒளிவிட்டு வளரத் துவங்கியது. இருட்டறையினுள்ளே பொன்னொளி பாய்ந்ததும் காரிருளைத் தேடிக் கதிகலங்கி ஓடும் வௌவால் கூட்டம்போல பொற்காலத்தின் புதுமைக் கீதத்தைக்கேட்ட புரட்டர்களும், போக்கிரிகளும், மதத் தலைவர்களும், மன்னர் பரம்பரையினரும், செல்வச் சீமான்களும், சீறிவிழும் பூமான்களும், அதிகார வெறியர்களும் ஆணவக்காரர்களும் இருள் எங்கே கிடைக்குமென்று தேடித் தேடி ஓடினர். பதினாறுவது நூற்றாண்டில் விஞ்ஞானம் வெடி மருந்தைத் தந்தது. காலச் சக்கரம் வேகமாகச் சுழலுறது. நான்கு நூற்றாண்டுகள் ஓடி மறைந்தன. விஞ்ஞானம் வளர்ந்தது, வளர்கிறது, வளர்ந்துகொண்டே இருக்கிறது. அணுகுண்டையும் அதனினும் ஆற்றல் மிக்க நீரக்குண்டையும் விண் வாணங்களையும் குழந்தைத் திங்களையும் இன்று உலகிற்கு அளித்திருக்கிறது விஞ்ஞானம். அழிவுக் கருவிகளினும் அதிகமாக ஆக்கக் கருவிகளையே விஞ்ஞானம் தருகிறது, தந்திருக்கிறது. விண்ணில் பறந்து செல்லும் ஊர்தி, கடலைக் கிழித்துச் செல்லும் கப்பல், வெளிஉலக நிகழ்ச்சிகளைக் காட்டும் தொலைக் காட்சி, விண்கோள்களை அருகில் காட்டும் தொலைநோக்கி ஆடும் நிழற் படம், பாடும் வானொலி, செயற்கை உறுப்புக்கள், சிங்காரப் பொருட்கள் இன்னும் எண்ணிக்கைக் குள்ளடங்காத அளவற்ற புதுமைகளை உலகிற்குத் தருகிறது விஞ்ஞானம்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் தனது உச்ச நிலையை அடைந்துவிட்டது. மக்களைப் படைத்தான் மகேஸ்வரன் என்றால், அந்த மகேஸ்வரனையே கட்டி இழுத்து வந்து மக்களின் முன்னே வேடிக்கைப் பொருளாக விளையாட்டுக் காட்டும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்றைய சமுதாய நிலையை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதை சுவைபட ஆனால்சுருக்கமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்:-

"நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் உச்ச நிலையை அடைந்திருக்கிறது விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் காலத்தையும் நேரத்தையும் மிகமிகக் குறைத்துவிட்டன. ஆகாயத்தில் பறக்கிறோம், ஆழ்கடலைக் கடக்கிறோம். சந்திரமண்டலத்தை எட்டிப்பிடிக்கத் தாவிக் கொண்டிருக்கிறோம். சிதைந்துபோன உறுப்புகளுக்குப் புது உறுப்புகளைச் சேர்க்கிறோம். வெகுதூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை வீட்டிலிருந்தபடியே கண்டு களிக்கிறோம். இவை மட்டுமல்ல, இன்னும் எண்ணிறந்த நன்மைகளை மின்சக்தியைப் பயன்படுத்தி நாம் அடைகிறோம்-அடைந்து கொண்டும் வருகிறோம். அமெரிக்காவில் நடக்கும் செய்திகளை ஆப்பிரிக்காவிற்கு அரைநொடியில் அனுப்பிக் கொடுக்க முடிகிறது இன்று. அறிவுத் துறையில் நம்மிடம் இவ்வளவு முன்னேற்றம் இருந்தும்கூட உலகத்தின் பொருளாதார நிலை சீர்படவில்லை. பொருட்களை உற்பத்தி பண்ணுவதிலும் அவைகளை உபயோகிப்பதிலும் இன்னும் ஓர் ஒழுங்கு, நியதி, நேர்மை ஏற்படவில்லை. உலகில் ஏற்றத் தாழ்வுகள் ஏராளம் இருக்கின்றன. இல்லாதவன் இருக்கின்றவனைப் பார்த்து ஏங்குகிறான். இந்த ஏக்கம் எத்தனையோ தொல்லைகளை, துயர்களை, புரட்சிகளை இடர்களை உலகத்தில் உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. எனவே உலகத்தில் கொந்தளிப்புக் கூடுதலாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே ஒழிய, கொஞ்சங்கூடக் குறையவில்லை. இருக்கின்றவர்கள் இல்லாதவர்களைத் தங்கள் எடுபிடிகளாக மாற்றிக்கொண்டு காலாவிட்ட வேலைகளைத் தலையால் செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். இதன் விளைவு மிக மிக ஆபத்தானது மட்டுமல்ல, அழிவைத் தருவதும்கூட. இந்தப் புயல் தடுக்கப்படாதவரை உலகில் போரின் புகைச்சல் எழுந்து கொண்டேயிருக்கும். இந்தப் புகைச்சல்தான் உலகின் அழிவிற்கு முன்னறிவிப்பாகத் திகழ்கிறது. இனிமேல் போர் ஒன்று ஏற்படுமானால் உலகமே பூண்டோடு அழிந்துவிடும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதனால் எதிர்காலம் என்ன நிலையிலிருக்கும் என்பதைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் அளவற்ற அச்சத்துடனும் நடுக்கத்துடனுமே வாழ்கின்றனர்." இந்த விஞ்ஞான வித்தகரின் சொற்கள் உலகின் நிலையை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டியது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள மறுக்க முடியாத கடமையாகும்.

உலக சமுதாயம் இதுவரை எத்தனையோ துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. உலகத்தில் எத்தனையோ மாற்றங்கள், எண்ணச் சுழலுக்குள் அடக்கிவிட முடியாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கொடி கட்டி வாழ்ந்த அரசுகளெல்லாம் அடிச்சுவடு தெரியாமல் அழிந்து போயிருக்கின்றன. உலகத்தையே அடக்கியாண்ட மன்னாதி மன்னர்களெல்லாம் ஒருபிடி சாம்பலாகமாறி அவர்களின் முடிகளெல்லாம் மண்ணை முத்தமிட்டுப் பொடிப் பொடியாகச் சிதறி மறைந்திருக்கின்ற செய்திகளை வரலாறு கூறுகிறது. எத்தனையோ அரசுக் கட்டில்களும், ஆள்வோர்முடிகளும் பொருட்காட்சிச் சாலையினுள்ளே மக்களின் பார்வைக்குப் பத்திரமாகப் பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் கடந்துபோன நிகழ்ச்சிகள் நமக்குக் கற்பிக்கும் பாடம். ஆனால் இன்றைய நிலை ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. உலகத்தின் எதிர்கால நிலைமையை நிர்ணயிக்கும் துறையில் உலகின் ஒவ்வொரு நாடும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. வல்லரசுகள் சில சேர்ந்துகொண்டு 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பழமொழிக்கேற்ப நாட்டை வேட்டைக் காடாக்கலாம் என்ற எண்ணம் இப்போது இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சின்னஞ்சிறு நாடுகளும் இன்று சிங்கார நடைபோட முடிகிறது. இருந்துங்கூட இன்று செஞ்சீனாவை ஒரு நாடு என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறது பொருளாதாரத்தில் உயர்ந்து, அகிலத்தையே ஆட்டிப் படைக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா. ஒரு உலகப்பெரும் போரை இந்த நிகழ்ச்சி உற்பத்தி பண்ணிவிட்டாலும்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. உலக நாடுகளின் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, அரசியல் கொந்தளிப்புகளை அடக்கி, சண்டைகளை ஒழித்து,சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் எத்தனையோ பல நிறுவனங்கள் தோன்றிப் பிறகு நிலைபெருமல் அழிந்துபோனதுண்டு. இன்று இருக்கிற நிறுவனமும் கோல் எடுத்தவனுக்குக் குனிந்துகொடுக்கும் தன்மையுடையதாகத்தானிருக்கிறதே தவிர, உலகப் பொது நன்மைக்கு உழைக்கிறோம் என்ற நல்லெண்ணத்தோடு நடப்பதாகத் தெரியவில்லை. அதன் அங்கத்தினர்களும் அகில உலகத்திலும்அமைதி தவழவேண்டும் என்ற அதன் அடிப்படைத் தத்துவங்களை மறந்து சொந்த நாட்டைப் புகழ்ந்து பேசி அடுத்த நாட்டோருக்கு ஆத்திரமூட்டி வருகிறார்கள். வீட்டைப் பேசி முடித்துத் தன் பெயரில் விலை வாங்கப் போகிறவர் ஐந்தாவது மாடியின் மேல் ஏன் ஆறாவது மாடி கட்டவில்லை என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னதாக அடித்தளம் பலமுடையதுதானா என்பதை அறிவுக் கண் கொண்டு ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும். அடித்தளம் பலமாக இருந்தால் கட்டிடமும் ஆட்டம் கொடுக்காது. புலி வேட்டைக்குப் போனவன் எலியைத் துரத்திச் சென்றால் கேட்டவர் நகைப்பர்.

இன்றும், "விஞ்ஞானம், உலகத்தார் அத்தனை பேருக்கும் உரியது.

அளக்கமுடியாத அளவிற்கு வளர்ந்து விரிந்துள்ள அறிவிற்கு வரம்பிட்டுத் தங்கள் அதிகார எல்லைக்குள்-அரசியலுக்குள் அதை அடிமையாக்கக் கூடாது. அறிவு அனைவருக்கும் பொது. அதனைப் பகிர்ந்து கொள்ளவோ பயன்படுத்தவோ உலகில் தோன்றிய மனிதர்கள் அத்தனை பேருக்கும் உரிமையுண்டு.'' என்ற எண்ணத்தில் வல்லரசுகளின் அங்கத்தினர்கள் அறிவை அரசியலுக்கு அடிமைப்படுத்தவும் தவறுவதில்லை. இக்குறைகளெல்லாம் நீக்கப்படாத வரை உலக ஒற்றுமை நிறுவனம் சரியாக மனித உரிமைகளுக்குப் போராட முடியாது.

சென்ற உலகப்போர் எத்தனையோ இழப்புகளை ஏற்படுத்தி யிருந்தாலுங் கூட, சில உண்மைகளை உலகிற்கு உணர்த்திக்கொண்டு சென்றிருக்கிறது. அந்த உண்மைகளை நன்றாக உணர்ந்து உரிய வழியில் நாம் பயன்படுத்திக் கொண்டால் உலகத்தில் ஒற்றுமையும் உயரிய பண்பும், சாந்தமும் சமாதானமும், அமைதியும் அன்பும் நிலவுவது உறுதி. "போர் முழக்கம் செய்து உலகைப் புதைகுழிக்கு இழுத்துச் செல்லும் புன்மைக் குணம் அகலவேண்டும். எங்கும் எப்போதும் சாந்தமும் சமாதானமும் நிலவவேண்டும் ' என்ற எண்ணமும், நாம் மனித குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற மறக்கமுடியாத உண்மையும் உலகத்தில் வாழும் மனிதர்கள் அத்தனை பேரின் இதயங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குக் கீழே சின்ன நாடுகளையும் சிக்கவைக்கலாம் என்ற எண்ணம் அழிந்துவிட்டதோடு, சின்னநாடுகளும் இன்று உலக அரங்கில் சிங்கார நடைபோட்டு உலவ முடிகிறது. இன வழிப்படி, கலாசாரப் பண்பாட்டின் அடிப்படையில், இயற்கை அமைப்புக்கும் பேசும் மொழிக்கும் மதிப்பளித்து, நாடுகளை அமைத்து, அப்படி அமைக்கப்பட்ட நாடுகளெல்லாம் மனித குலம் என்ற ஒரு வழி நின்று, உலக ஒற்றுமை மன்றத்தை நிறுவி, உலகில் போரையும் பூசலேயும் ஒழித்து அமைதியைப் பேண வேண்டும்'' இந்த நிறுவனம் 'எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்' 'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' இத்தகைய மன்றம் ஒன்று மிக விரைவில் அமைக்க உலகத்தார் அத்தனை பேரும் முயன்று உழைக்க வேண்டும், இன்றைய நிலையில் இது ஒன்றே உலக சமுதாய உய்வுக்கு வழி வகுப்பது.

★


இராமநாதபுரம் மாவட்ட **தி. மு. க. 3-வது மாநாடு**

**22, 23-2-58-ஆம் (சனி ஞாயிறு) நாட்களில்**

**தேவகோட்டை---வள்ளுவர் திடல்**

**மஜீத் அரங்கில் நடைபெறும்.**

| தலைவர்: | திறப்பாளர்: |
|---|---|
| **க. அன்பழகன்** எம்.ஏ., எம்.எல்.ஏ. | **எஸ். எஸ். இராசேந்திரன்** |

**அண்ணாதுரை,** பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

**மற்றும் கழக முன்னணித் தோழர்கள் கலந்துகொள்வர்.**

| முதல் நாள்: | இரண்டாம் நாள்: |
|---|---|
| 22—2—58 சனி இரவு | 23—2—58 ஞாயிறு இரவு |
| தோழர் மு. கருணாநிதி அவர்கள் நடிப்பதும், புதுமை நாடகமன்றத்தார் அளிப்பதுமான **"உதய சூரியன்"** நாடகம் | தோழர்; **நாகூர் அனீபா** அவர்கள் குழுவினரின் இசை விருந்து |

இருநாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு அணா 8

இ. லெ. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு. தலைவர்.

நவமார்க்கண்டேயன்,
பொருளாளர்.

இராம. வெள்ளையன்,
மா. குருசாமி,
செயலாளர்கள்.




"எழுந்து நில்லுங்கள்!"

ஒருவரல்ல, இருவரல்ல; ஓராயிரமல்ல, ஈராயிரமல்ல; இலட்சக்கணக்கான மக்கள், எழுந்து நின்றனர்.

"நாம் உடையணியாத போலீஸ்காரர்கள் என்பதை இந்த அரசுக்கு உணர்த்த வேண்டும். கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதை இவர்களுக்குக் காட்ட வேண்டும். எங்கே, எல்லோரும் எழுந்து நில்லுங்கள்"

எல்லோரும் எழுந்து நின்றனர்! அமைதியோடு, எழுந்துநின்றனர்!

தளபதி கட்டளை பிறப்பிக்க, விரல் நீட்டிய இடத்தில் அம்புகள் போல் பாயும், பண்பு நமது பரம்பரைச் சொத்து என்று படித்திருக்கிறோம் ஏடுகளில். படித்த காட்சியைச் சென்னைக் கடற்கரை காட்டிற்று! எந்த அரசு, நம்மால் அமைதிக்குப் பங்கம் வரும் என்று ஜனவரி 3ந் தேதியன்று கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததோ, அதே கடற்கரையில், ஜனவரி 14-ந் தேதியன்று இக்காட்சி நிகழ்ந்தது.

ஏதோ பெரிய அமர்க்களம் நடைபெறப்போவது போலவும், கூட்டத்துக்கு வரும் மக்கள் எல்லாரும் கத்தி கம்பு எடுத்துக்கொண்டு கலவரம் செய்யப்போவது போன்றும், பயமுறுத்தலை உருவாக்க முனைந்தனர் ஆள்வோர். திருவல்லிக்கேணி நோக்கிச் செல்லும் எல்லாச் சர்க்கார் பஸ்களையும், திடீரென நிறுத்தினர். ஏன்—ஏன்—என்று மக்கள் கேட்கும்போது, பயமும்பதட்டமும் பரிமாறிக்கொள்ளப்படும் எனக் கருதினர் போலும். திருவல்லிக்கேணி வட்டாரத்திலுள்ள கடைக்காரர்களிடமும், தொழிலாளர்களிடமும்கூட, எச்சரிக்கைகள் எழுப்பப்பட்டதாக அறிந்தோம். தி. மு. க. என்றாலே ஒரு பயமும் பதைப்பும் மக்களிடம் உருவாக்க, ஆள்வோரும் அவர்தம் அம்புகளும் பெரிதும் முயன்றனர். ஆனால், அந்தோ, எல்லாம் வீணாயிற்று! வெள்ளம்போல் மக்கள் கூட்டம் விரைந்து வரத்தான் செய்தது,

அண்ணல்

கடற்கரைக்கு. சாரிசாரியாக எறும்புகள் ஊர்ந்து செல்வது போல், இலட்சக்கணக்கான மக்கள்-தடையுத்தரவு போடப்பட்ட இடத்தை நோக்கி, எச்சரிக்கைகளும் பயமுறுத்தல்களும் செய்யப்பட்டும், கூடினர்.

இதுவே போதும், மக்கள் மன்றத்தின், அனுதாபமும் ஆர்வமும் யார் பக்கம் இருக்கிறதென்பதை விளக்க! எவ்வளவு பயமுறுத்தல்கள் செய்யப்படினும், தி.மு.க.வின் குரல் கேட்டிட, மக்களுக்குள்ள ஆசையின் அளவினை இதுவே சொல்லும்!!

இப்படிக் கூடியிருந்த மக்களைப் பார்த்துத்தான், தி. மு. க. வின் முன்னாள் பொதுச் செயலாளர், சொன்னார், "நாம் எவ்வளவு கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதைக் காட்ட, எழுந்து நில்லுங்கள்", என்று.

எழுந்து நின்றது மக்கள் வெள்ளம்! அந்தக் காட்சி, இறும்பூதெய்தும் வகையில் இருந்தது என்கின்றனர், கண்டோர்!! மாற்றுக்கட்சி ஏடாம், 'தினமணி' கூட, மறக்கவில்லை, இச்செய்தியைத்தர. ஆள்வோரின் அம்புகள், எவ்வளவோ பரபரப்பை உருவாக்க முயற்சித்தும், திருவல்லிக்கேணியிலிருக்கும் கடைகள் யாவும் கூட்டம் முடியும் வரையில், திறந்தே இருந்தன.

சிறுகலாம், மிகச் சிறிய கல் வீச்சு, சின்னஞ்சிறு தகராறுகூட ஏற்படவில்லை.

இந்த அமைதிதானே 3ந் தேதியன்று இருந்திருக்கும். அன்றைய தினம் பொதுக்கூட்டம் நடாத்த அனுமதி தரப்பட்டிருந்தால், இதுபோலத்தானே அக்கூட்டமும் நடைபெற்றிருக்கும். இன்று, நேற்று!! இதுவரை, எத்தனை கூட்டங்களை நடத்தியிருக்கிறோம், சென்னையில். கடற்கரையில் மட்டுமா, சின்னஞ்சிறு சந்துகள் உள்பட, வாரத்துக்கு ஒன்று இரண்டு என்று, இதுவரையில் எத்தனை கூட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன! எங்காவது ஒரு குழப்பம், தகராறு, பூசல் ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமா? நிச்சயமாக, எதிரிகள்கூடக் கூற முடியாது. அவ்வளவு அமைதியையும், கண்ணியத்தையும், நமது மக்கள் கடைபிடித்து வருகின்றனர். இருந்தும், காமராஜர் அரசு, 3-ந் தேதி கூட்டம் நடத்த அனுமதி மறுத்தது. அதன் மூலம், தனது ஆதிக்கத்தின் வேகத்தை, நமக்கும் நாட்டுக்கும் உணர்த்த நினைத்தது. பேசச் சென்ற நம்மையும் பிடித்தடைத்தது! பேச்சைக் கேட்க வந்த மக்களையும், தடியால் அடித்து, கண்ணீர்க்குண்டுகளைப் போட்டு, கலைக்க முயன்றது! காலிகளும், கூலிகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டத்துக்குச் சென்றவர்களை, கற்களால் தாக்கியிருக்கிறார்கள். விளைவு, விபரீதமாகி, அடிதடியும் அமர்க்களமும் நிகழ ஏதுவாயிற்று.

கூட்டம்தான் இப்படியாயிற்றே கருப்புக் கொடி காட்டவாவது, அனுமதித்திருக்கலாமன்றோ? குமாரசாமியார் ஆட்சியிலும், ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும், கருப்புக்கொடிகள் காட்டி

யிருக்கிறோம். ஜனநாயக உரிமையான அதை, நமது அதிருப்தியை காட்டுக்கொள்ள, பயன்படுத்தியிருக்கிறோம். அமைதியும் கண்ணியமும் நிரம்பிய வழி அந்த நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டியிருக்கிறோம். நேரு பண்டிதர் வந்த அன்று, அதுபோலக் கண்டனத்தைக் காட்டிக்கொள்ள மக்கள் அனுமதிக்கப்படவில்லை. எப்படியாவது, ஒரு கருப்புக்கொடிகூட நேருவின் கண்ணில் படாமல் செய்துவிட வேண்டும் என்கிற 'வெறி'யுடனேயே வேலை செய்திருக்கிறார்கள், ஆள்வோர். அன்றைய தினம் பறங்கிமலையிலும், மாலையில் மவுண்ட்ரோடிலும நடைபெற்ற போலீஸ் தர்பார்களைப் பற்றிக் கேட்கக் கேட்க நெஞ்சு நெகிழுகிறது. மீனம்பாக்கம் விமான நிலையம் சென்று, வெற்றிகரமாகக் கருப்புக்கொடி காட்டிவிட்டுத் திருமபிய மக்களை, அடி அடி என்று அடித்திருக்கிறார்கள் ரிசர்வ் போலீசார். தப்பித்து ஓட முயன்றவர்களை ஓடிப்பிடித்து அடித்திருக்கிறார்கள்! "என்னடா கையில், கருப்புக் கொடி?" என்று கேட்டுத் தாக்கியிருக்கிறார்கள்! கண்ணீர்ப் புகை போட்டு, அது தாங்காது அங்குமிங்கும் ஓடிய மக்களை வளைத்துக்கொண்டு அடியடி என்று அடித்திருக்கிறார்கள்! பக்கத்திலே வெட்டப்பட்டிருந்த பள்ளங்களிலே அகப்பட்டுப் படாத பாடு பட்டனராம் மக்கள். கட்டிடத்துக்குள் குதித்தாவது தப்பலாம் என்று ஓடி, சுவர் ஏறும் போது, அடிபட்டதால் பிரக்ஞை இழந்து கீழே விழுந்திருக்கிறார்கள். இப்படி அலங்கோலத் தர்பார் நடத்தப்பட்டு இருக்கிறது, பறங்கிமலையில்! அன்று மாலை மவுண்ட்ரோடிலே கடை வைத்திருப்போரையும், டாக்சி வண்டி ஓட்டுபவர்களையும் என்ன நடந்தது என்று கேட்டுப் பாருங்கள். விழிகள் குளமாக அவ்வளவு வேதனையுடன் சொல்வர். வரிசையாக நின்ற மக்கள் மீது போலீசார், பாய, மக்கள் பயந்து அங்குமிங்கும் ஓட, அந்த வேகத்திலே பலர் மிதிபட்டு விழ, ஆயிரக்கணக்கான கால்கள் அவர்களைத் துவைக்க, அப்பப்பா, அங்கு நடந்த கோலம் வர்ணிக்கக் கூடியதல்ல. இலட்சக்கணக்கான மக்கள் மீது, கண்ணீர்ப்புகையும் தடியடியும் தாக்க, வடித்த கண்ணீர் மிகப் பெரிது. சைகிளை வைததுக்கொண்டு நின்றோர் கலவரத்துக்குப் பிறகு தமது சைகிள் 'அப்பளம்' போல ஆகியிருப்பதையே கண்டனராம்! இரண்டு உயிர்கள் — கூட்டத்தில் நசுங்கியே செத்தனர் என்று போலீசாரே கூறுகின்றனர் என்றால், எவ்வளவு தூரம அன்று போலீசார் மக்களைத் துரத்தியிருக்கவேண்டும? ஒடிந்த கால்கள் பல, உடைந்த மண்டைகள் ஏராளம், கிழிந்து தொங்கியதாம் சதை, உடம்பெல்லாம் வாங்கிய அடிகளால் 'கன்னி'ப் போனவர்களாக இன்னும் உலவுகிறார்கள் ஆயிரக்கணக்கில். இவ்வளவு தூரம், வெறியாட்டம நடத்தியிருக்கிறது? இதனைக்கண்டு ஆத்திரமடைந்திருக்கின்றனர் மக்கள். இது போதாதென்று, அன்றெல்லாம் போலீசார் காக்ஸ்சேரி போன்ற ஆதித்திராவிடச் சேரிகளிலெல்லாம் புகுந்து, குடிசைக்குள்ளிருந்தோரையெல்லாம வெளியே இழுத்துவந்து, அடித்து, இழுத்துக்கொண்டு போயிருக்கின்றனர்.

நேரு, வந்தது சென்னைக்கு! தடியடி—கண்ணீர்ப்புகை—கைது யாவும் சென்னையில், நிகழ்ந்தது!! சரி, மாநில முழுதும், அன்றும் அதற்கு முதல நாளும் ஒரு இடமல்ல, எல்லா ஊர்களிலும் மொத்தம் 4700-தோழர்களைக் கைது செய்தனரே — ஏன், அது? செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, நாஞ்சில் போன்ற மாவட்டங்களிலெல்லாம் எதற்காகக் கழகத் தோழர்கள் கைதுசெய்யபபட்டனர்? என்ன காரணம்?

**கூட்டத்துக்கு ஏன் அனுமதி மறுத்தாய்?**

**கருப்புக் கொடி வைத்திருந்தவர்களையெல்லாம் ஏன் போலீசை விட்டு அடித்தாய்?**

**இருவர் சாகவும், பலர் காலொடிந்தும் கையொடிந்தும், கிடக்கும்படி ஏன் செய்தாய்?**

**சென்னையில் மட்டுமின்றி, எல்லா வெளியூர்களிலும், ஏன் தோழர்களைக் கைது செய்தாய்?**

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டிய காமராஜ் அரசு, எங்கே மக்கள் இந்தக் கேள்விகளையெல்லாம் எழுப்பிவிடபபோகின்றனரோ, அர்த்தமில்லாமல் நாம் மேற்கொண்ட அடாவடித் தர்பாரைபபற்றிப் பேசுவார்களோ, எனகிற அச்சத்தில், மக்களின கவனத்தை வேறு வழியில் திருப்ப முயற்சிக்கின்றனர். தங்களது தவறை மறைக்க, கழகத்தின் மேல் பழியையும எடுத்து வீசுகின்றனர்! "தி.மு.க என்ன செய்தது தெரியுமா — தி.மு.க. தலைவரே, இந்தியை ஒப்புக்கொண்டார். அறிவீரோ, நீஙகள்" என்று ஆங்காங்கும் பேசத் தலைப்பட்டிருக்கின்றனர். திருவிழாக்காலங்களில் கூடியிருப்போர் கவனத்தைக் கலைக்க "ஆ! அதோ ஒரு பாம்பு!" என்று அலறுவார்களாம், எத்தர்கள். கூட்டம வந்த வேலையை மறந்து அலறியத்துக்கொண்டு ஓட முயற்சிக்கும்போது, தங்கள் வேலையை செவ்வனே முடித்துக் கொள்வார்களாம் முடிச்சு அவிழ்ப்பவர்கள். அதேபோல, ஆதிக்கத் தர்பார் நடத்தி, தமது முகத்தில் கரி பூசிக் கொண்ட இந்த சர்க்கார், மக்களின் மனதிலே நிறைந்துள்ள பிரச்சினையை மறைக்க, நமமீது பழியைத் தூக்கிப போடுகின்றனர். இபபடிச் செய்வது, ஆதிக்கக்காரர்களின் பழைய தந்திரம என்பதை நாம் அறிவோம. ஏதாவது ஒரு புதிரை எடுத்துப் போட்டு, மககளின் கவனத்தை அந்த வழியில் திருபபிவிட முயல்வது, எத்தர்களின விளையாட்டு என்பதையும் மக்கள் அறிவார்கள்.

**இரண்டு உயிர்கள் செத்தன! ஏராளமானோர், தடியடிக்கு ஆளாகினர்! பல இடங்களிலும் கைது !!**

ஏன் இதெல்லாம்? கேட்க வேண்டும மக்கள்! அப்படி மக்கள் கேட்டால், என்ன பதிலைச் சொல்வது நாம் எனகிற அச்சத்தாலேயே, அமைச்சர்கள் அங்குமிங்கும் ஓடி, நமமீது 'பிரமாதமாக'க் குற்றம சாட்டிட முயற்சிக்கிறார்கள்!!

**இரண்டு உயிர்கள் செத்தன! காமராசரின் ஆட்சியிலேயே, இருவர் பிணமாயினர் !!**

இது, சாதாரணமானதா? யார் அவர்கள்! ஏன் இப்படி அலங்கோலமாகச் சாகவேண்டும்?

(16-ம் பக்கம் பார்க்க)

# ஒய்யாரக் கொண்டையாம்...!

**ஒய்யாரக் கொண்டையாம்**
**தாழம்பூவாம்**
**உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!-** என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதற்கு, நல்லதொரு உதாரணமாக அமைந்திருப்பது, டில்லி காங்கிரஸ் ஆட்சியாகும். நேரு அவர்களைப் பற்றி, வெளிநாடுகள் யாவும் போற்றுகின்றன. புதியதொரு பாதையில், இந்தியா போய்க்கொண்டிருப்பதாக வானளாவப் பேசுகிறார்கள். "ஆகா! ஊகூ! எங்கள் பெருமை என்ன தெரியுமா? அவர் போற்றுகிறார்! இவர் பாராட்டுகிறார்!!", என்று காங்கிரஸ்காரர்களும் கர்ச்சிக்கிறார்கள். ஒய்யாரக் கொண்டை மட்டுமே வெளிக்குத் தெரிகிறது! உள்ளே, எவ்வளவு ஈரும் பேனும் உள்ளன தெரியுமா?-என்று விவரிக்கிறார், பார்லிமெண்டு உறுப்பினரான **ஆச்சார்ய கிருபளானி.** கிருபளானி, காங்கிரஸ் தலைவராக இருந்தவர்—காந்தியடிகளிடம் பல காலம் இருந்தவர். அவரது இந்தக் கருத்துக்களை, அகில இந்தியப் புகழ்பாடுகிறவர்கள், சிந்தித்துப் பார்க்க வேண்டும்:-

மத்திய அரசாங்கத்தில் பணம் வீணாக்கப்படுவதைப் பற்றிச் சில உதாரணங்களை பட்ஜட் உரையில் நான் குறிப்பிட்டேன். **புதுடில்லி நகரம் "ஆபீசுகள் நிறைந்த ஒரு காடு"** என்று நமது பிரதம மந்திரியே கூறினார். யுத்த காலத்தில் காரியாலயங்கள் பல மடங்கு பெருகி விட்டன. அதற்குப் பின் சுய ராஜ்ய அரசாங்கம், மாஜி சமஸ்தானாதிபதிகளின் அரண்மனைகளையும் மற்ற பெரிய பெரிய கட்டிடங்களையும் அரசாங்க காரியாலயமாகவோ அல்லது வேறு காரியங்களுக்காகவோ எடுத்துக்கொண்டு விட்டனர். இருந்தாலும்கூட, பத்து ஆண்டுகளாக நடந்துவரும் இந்தக் கட்டிட வேலைகளுக்கு இன்னும் ஒரு முடிவு காணவில்லை. மற்ற நாடுகளில் பார்த்தால், மிகப் பெரிய திட்டங்களை வகுத்து, அதற்கு வேண்டிய பணம் பற்றாக்குறையாகிவிட்டால் கிடைக்கின்ற வசதிகளோடு மக்கள் வாழ்வதையும் அந்த நிலையிலேயே தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வதையும் காணலாம். உலக யுத்தத்திற்குப்பின் மேற்கு ஜெர்மனியில் மக்கள் சின்னஞ் சிறு குடிசைகளிலே வசித்தனர். அரசாங்க காரியாலயங்களைக்கூடச் சிறு இடங்களில் வைத்துக்கொண்டனர். கட்டிட நிர்மாண வேலையனைத்தும், மில்களும் தொழிற்சாலைகளும் கட்டுவதற்காக செய்யப்பட்டது. ஆனால் டில்லியில், அரசாங்கத் தலைமைக் காரியாலயமான செக்ரடேரியட்டில் ஒவ்வொரு அறைக்கும் ரூ. 5000 செலவழிக்கப்படவிருக்கிறது. அனாவசிய அலங்காரம் செய்ய! ஒவ்வொரு கட்டிடமாக 'ஏர் கண்டிஷன்' செய்து வருகின்றனர். இப்போது கட்டப்படும் கட்டிடங்களும் 'ஏர் கண்டிஷன்' வசதியோடு கட்டப்படுகின்றன. புதியதாக அணைகட்டவோ அல்லது வேறு ஏதாவது திட்டம் போடப்பட்டு, வேலை துவங்கும்போதோ, முதன்முதலில் கட்டப்படுவது அதிகாரிகள் வசிப்பதற்காகப் பெரிய பெரிய பங்களாக்களும், வசதிமிக்க கட்டிடங்களும்தான்!

ராஜ்ய அரசாங்கங்களிலும் இப்படித்தான் நடக்கிறது. கிராமப் புறங்களிலும், நகரப் புறங்களிலும் மக்கள் குடியிருக்கின்ற நிலையைப் பற்றி, "நாகரிக வளர்ச்சி பெற்றது என்று உரிமை பாராட்டிக் கொள்ளுகின்ற எந்த ஒரு சமுதாயத்திற்கும் இது ஒரு பெருத்த அவமானம்" என்று நமது நிதியமைச்சர் கூடக் குறிப்பிட்டார். ஆயினும், மக்கள் நிலை ஒருபுறம் இப்படியிருக்கும் அதே சமயத்தில், மற்றொருபுறம் புதிய புதிய காரியாலயங்களும், புதிய புதிய தலைநகரங்களும் பல ராஜ்யங்களில் எழுப்பப்படுகின்றன. சந்திகார் (பஞ்சாப) என்று புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நகரம் நவீன காலத்திய சிற்பக் கலையிலே அலாதியானதோர் சாதனை என்று கூறப்படுகிறது. உண்மைதான்! கவர்னர் மாளிகைக்கு மட்டும் 40-இட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது. பெப்சு (பாடியாலா கிழக்கு பஞ்சாப்) ராஜ்ய யூனியன் ராஜ்யம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், ஏற்கெனவே அங்கு கட்டப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுவந்த சட்டசபைக் கட்டிடம் அதற்கு மேல் உபயோகிக்கத் தகுதியற்றது என்று கருதி 68-இலட்ச ரூபாய் செலவில் புதியதாகச் சட்டசபைக் கட்டிடம் கட்டப்படுகிறது. 92-இலட்ச ரூபாய் செலவழித்து செயற்கை ஏரி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சந்திகாரில் வேலை செய்த பிரான்சு தேசத்தைச் சேர்ந்த இரண்டு சிற்பிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற கேள்வி பஞ்சாப் சட்டசபையில் கேட்கப்பட்டபோது, அதுவரையில் ஒருவருக்கு 9 லட்ச ரூபாயும் மற்றொருவருக்கு இரண்டரை லட்சம் ரூபாயும் கொடுக்கப்பட்டதாகப் பதில் வந்தது. மத்திய பிரதேசத்தின் கோடைகாலத் தலைநகரான பச்மாரியில், ஒரு விடுதி கட்டுவதற்காக 12 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. இதைத் தவிர,

பிரமுகர்கள் வந்தால் தங்குவதற்கெனத் தனியாக வேறொரு விடுதியும் கட்டப்படுகிறது. பிஹார் கோடை வாசஸ்தலமான ராஞ்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்திற்கு அரசாங்கத் தலைவர்களும், அதிகாரிகளும் செல்வதற்காக, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்காக ஆகும் செலவுக்குமேல் பத்து லட்ச ரூபாய் செலவாகிறது. "சர்க்யூட் ஹவுஸ்" என்ற விடுதி ஒன்று ஏற்கனவே இருந்தும், மற்றொன்று கட்டப்படுகிறது. இதைப் போலவே மற்ற ராஜ்ய சர்க்கார்களும் கோடை காலத்தில் மலை வாசஸ்தலங்களுக்குச் செல்லும் ஆடம்பரப் பழக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

சுதந்திரம் பெறுமுன் அந்நிய ஆட்சியாளர்கள் இத்தகைய ஆடம்பரங்களில் ஈடுபட்டபோது, அவர்கள் இந்திய சீதோஷ்ண நிலையின் வெப்பத்திற்குப் பழக்கப்படாதவர்கள் என்ற போதிலும் கூட நாம் தீவிரமாகக் கண்டித்தோம். இப்போது, நமது சுதேச ஆட்சியாளர்களே இந்த ஆடம்பரத்தை தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் அனுபவிப்பதற்காக வேண்டி நீடிக்கச் செய்துள்ளனர். முன்பெல்லாம் மலை வாசஸ்தலங்களில் ஊருக்குள் செல்லும் சாலைகளில் வைசிராய், சேனாதிபதி, கவர்னர் ஆகியவர்கள் தான் காரில் செல்ல முடியும். இப்போதோ மந்திரிகளின் கார்களும், அரசாங்கக் காரியதரிசிகளின் கார்களும் மலைகளிலுள்ள ஊர்களின் குறுகிய பாதைகளில் பாதசாரிகளுக்கு அசௌகரியமும், உபத்திரவமும், ஆபத்தும் உண்டாக்கும் வகையில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஐரோபபிய உத்தியோகஸ்தர்கள் மலை வாசஸ்தலங்களில் நடந்துஉலாவித் தேகப் பயிற்சி பெற்று நன்றாக அனுபவித்தனர். ஆனால் நமது இந்திய அதிகாரிகளோ உள்ளத்திற்கு குதூகலம் அளிக்கும் இந்தத் தேகப் பயிற்சியைக்கூட செய்ய முடியாத "மிருதுத் தன்மை" படைத்தவர்கள்! வீட்டு வாசற்படி வரைக்கும் காரில் வந்து இறங்குவார்கள்!!

*

நமது ஆட்சியாளர்களின் திறமைக்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம். அஸ்ஸாம் ராஜ்யத்தில் 1957 மார்ச் 31உ முடிந்த பட்ஜட்டின் மொத்தத் தொகையான 47·10 கோடி ரூபாயில் 13·47 கோடி ரூபாயை அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்கள் செலவழிக்காமல் அந்த நிதி வருடத்தின் கடைசி நாளன்று திருப்பிக் கொடுத்துவிட்டனர். செலவழிக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 28·6 சதவீதம் செலவழிக்கப்பட முடியவில்லை. பற்றாக்குறை பட்ஜட்டுகள் பற்றிப் பிரதம மந்திரி சமீபத்தில் குறிப்பிட்டார். தேவைக்கதிகமாகக் கணக்கிடுவதுதான் இதற்குக் காரணமாகும். சென்ற ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டதில்கூடச் சரிவு ஏற்பட்டது சுமார் 8 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. வழக்கமாகப் பட்ஜட்டில் சேர்க்கப்பட்ட பணத்தில் பெரும்பகுதியை நிதி வருடத்தின் கடைசி மாதமான மார்ச் மாதத்தில் எப்படியாவது செலவழிக்கப்படுவது உண்டு. அவசரமாகச் செலவழிக்கப்படும் இந்தத் தொகையில் பெருமளவு வீணாகிறது. பஞ்சாப் ராஜ்யத்தில் உணவு தானிய விநியோக திட்டமொன்று லாபமோ, நஷ்டமோ இல்லாத வகையில் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் 1954 - 55ல் ரூ. - 18,84318 நிகர நஷ்டமானதாக ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டது. இந்த நஷ்டத்திற்கு உணவு தானிய விலையில் சரிவேற்பட்டதும் சரியான நேரத்தில் விற்காததால் தானியங்கள் கெட்டுப் போனதும் காரணமாகும்.

கிருபளானி அவர்களின் இந்த உரையை இன்னொரு முறை படியுங்கள் - காங்கிரசாட்சியின் ஆடம்பர அனாவசியச் செலவுகள் நன்றாகப் புரியும்.

*

---

## திருமணம்

"திராவிட நாடு" ஏஜண்ட், தோழர் ஜி. எம். ஆறுமுகத்திற்கும் தோழியர் எஸ். ஏ. சாரதாம்பாளுக்கும் சிறுவலூர் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

---

14-ம் பக்கத் தொடர்ச்சி

---

என்ன காரணம் இதற்கு? தி. மு. க. அப்படியென்ன, மாபெரும் கலவரமா செய்ய இருந்தது? 14-ந் தேதி நடைபெற்ற கூட்டம் காட்டுமே; நம்மிடம் எவ்வளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ளது என்பதை. இந்த ஒழுங்கு குலையும்படியாக நடந்து கொண்டது யார்? ஆட்சியாளரன்றோ! ஏன், அவர்கள் இப்படி அடக்குமுறைப் பாதையை மேற்கொண்டனர்? இதற்குப் பதில் சொல்லவேண்டும், மக்கள் மன்றத்தில்!!

ஆள்வோர், மமதைப் பாதையில் சென்று, மாறாத பழியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அதை மறைக்க, ஏதாவது செய்ய வேண்டுமேயென்று, ஏதேதோ கூறித் திரிகின்றனர். இரண்டு உயிர்கள்! அடிதடி! கூட்டத்துக்குத் தடை! — ஏன், இவ்வளவு அடக்குமுறை? அமைதியையும் கண்ணியத்தையும் தமது வழிகாட்டியாகக் கொண்டியங்கும் கழகத்தினர்மீது, இவ்வளவு ஆத்திரத்தையும் எடுத்து வீசவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்குப் பதிலளிக்க வேண்டும், ஆள்வோர்.

பதிலளிக்கப் பயந்தே, பிரச்சினையை மாற்றுகின்றனர்! திசையைத் திருப்பிவிட முயல்கின்றனர்!! தாம் செய்தது தவறு— மக்கள் மனதில் இத்தவறு உறைத்தால் நமது ஆட்சியைக் கண்டிப்பார்கள் என்பதாலேயே, இப்படிச் செய்கின்றனர்.

ஆட்சி செய்த தீவினை, எடுத்துக் காட்டி, அஹிம்சா ஆட்சி எந்த வகையில் நடக்கிறது என்பதை மக்களிடம் சொல்லவேண்டியது நமது பொறுப்பு என்பதைத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது. இரண்டு உயிர்கள்! தடியடி! தடை!— இதற்குத் தக்கப் பதில் பெற முயற்சிக்க வேண்டும்; மக்கள் மன்றத்தில், ஆட்சியின் வெறியாட்டத்தை, உணர்த்த வேண்டிய கட்டம் இது.

★